
# கொட்டியாபுரத்து சிங்கம்

வரலாற்று குறுநாவல்



-சம்பூர் ஸதீஸ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டியாபுரத்து சிங்கம்

வரலாற்று குறுநாவல்

வைத்திய கலாநிதி
அருமைநாதன் ஸதீஸ்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **தலைப்பு** | : | கொட்டியாபுரத்து சிங்கம் |
| **விடயம்** | : | குறுநாவல் |
| **நூலாசிரியர்** | : | Dr. அ. ஸதீஸ்குமார் (MBBS) |
| **பதிப்பு** | : | முதலாவது பதிப்பு 2015 |
| **பதிப்புரிமை** | : | நூலாசிரியருக்கு |
| **அட்டைப்படம்** | : | திரு.ம.சச்சிதானந்தம் |
| **பக்கங்கள்** | : | 78 |
| **அளவு** | : | 18 x 22 செ.மீ |
| **தாள்** | : | ஐவரி 70gsm |
| ISBN | : | 978-955-44703-1-6 |
| **அச்சகம்** | : | ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்<br>திருகோணமலை. |

| | | |
|---|---|---|
| Title | : | Koddiyapuraththu Singam |
| Subject | : | Novelette |
| Author | : | Dr. A. Satheeskumar (MBBS) |
| Edition | : | 1st Edition, 2015 |
| Copy Right | : | Author |
| Pages | : | 72 |
| Size | : | 18 x 22 cm |
| Paper | : | 70gsm. Ivory |
| Printer | : | ShriRam Printers, Trincomalee |
| Price | : | 250.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

## தமிழ்ஒளி வ.அ. இராசரெத்தினம்



ஈழத்து தமிழிலக்கிய உலகில் முதுபெரும் இலக்கியவாதியாகத் திகழ்ந்த வ.அ. என்று சுருக்கமாக அழைக்கப்படும் மூதூரைச் சேர்ந்த கலாபூசணம், தமிழ்ஒளி அமரர் வஸ்தியாம்பிள்ளை அந்தோனி இராசரெத்தினம் அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு வரலாற்று புதையல்



கலாபூசணம்
மூதூர் முகைதீன்

இலக்கியத் துறையில் கால் பதிக்க விரும்பும் இளம் படைப்பாளிகள் பெரும்பாலும் கவிதை, சிறுகதையிலேயே அதிக நாட்டம் கொண்டவர்களாக தங்கள் படைப்பாற்றலை வெளிக்கொணர்வதை நாம் அதிகம் கண்டிருக்கிறோம். ஆனால் இதனை புறந்தள்ளும் வகையில் வரலாறு, நாவல் போன்ற இலக்கிய கனதியான பரப்புகளில் நின்று தன் கன்னிப் படையலாக ஒரு வரலாற்று நூலினை எழுதி அறிமுகமானவரே சம்பூர்மண் ஈன்ற மைந்தன் வைத்திய கலாநிதி அ.ஸதீஸ்குமார் அவர்கள்.

"சம்பூர் பிரதேசத்தின் தொன்மை" என்னும் வரலாற்று நூலின் மூலம் தன் முதல் தடத்தை இலக்கிய உலகில் பதித்து அதற்காக கிழக்கு மாகாண கலாசார பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் சிறந்த நூலுக்கான விருதையும் 2014ம் ஆண்டு பெற்றதன் மூலம் தனக்கும் எமது பிரதேசத்திற்கும் பெருமை தேடித்தந்தவர் அ.ஸதீஸ்குமார்.இதனை தொடர்ந்து 'கொட்டியாபுரத்து சிங்கம்' என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வரலாற்று நாவலை இலக்கிய சுவைஞர்களுக்கு நல்லதொரு தீனியாக படைத்தளித்துள்ளார்.

நாம் அறிந்தவரை மூதூர் பிரதேசத்தில் பிரபல எழுத்தாளர் அமரர் வ.அ.இராசரத்தினம் அவர்களுக்குப் பிறகு அ.ஸதீஸ்குமார் அவர்களே நாவலை எழுதி வெளியிட்டு பெருமை பெற்றுள்ளார். ஈழத்து இலக்கியப் பரப்பில் சமகாலத்தில் நாவல் எழுதுபவர்களின் எண்ணிக்கை மிகவும் அருகியே காணப்படுகின்றது. கால அவகாசம், நீளமாக எழுதுவதில் உள்ள சிரமம் போன்ற காரணங்களால் இத்துறையில் அதிகமானோர் ஈடுபாடு காட்டுவதில்லை. ஆனால் மருத்துவத் துறையைத் தன் தொழிலாகக் கொண்டுள்ள இளம் படைப்பாளியான திரு.ஸதீஸ்குமார் அவர்கள் இம்முயற்சியில் இறங்கி வெற்றி கண்டிருப்பது இலக்கியத்தின் மீதான அவரது தாகத்தினையும் பற்றினையும் எடுத்துக்காட்டக் கூடியதாக உள்ளது.

கடந்த கால் நூற்றாண்டுகால உள்நாட்டு யுத்தத்திற்கு பிறகு பலராலும் அதிகம் பேசப்படும் ஒரு ஊராக சம்பூர் பிரசித்தம் பெற்று விளங்குகின்றது. ஒரு காலத்தில் புகழ்மிக்க வரலாற்றைக் கொண்ட சம்பூர் கிராமம் இன்று பல்வேறு காரணிகளால் அழிக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட ஒரு இடமாக உலகின் கண்களில் காட்சியாக்கப்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் சம்பூரின் தொன்மையினையும், கீர்த்தியினையும் பறைசாற்றும் வகையில் சுமார் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இவ்வூர் அடங்கலான மூதூர் பிரதேசம் இலங்கை அரசியலில் சிங்கள மன்னர்களோடு கொண்டிருந்த நட்புறவு பற்றியும் இங்கு வாழ்ந்த வீரமறவர்களின் வாழ்வியல் பற்றியும் மிகவும் அற்புதமான முறையில் ஆசிரியர் நமக்கு அழகுற ஆக்கி அளித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வாழ்ந்த மக்களின் இருப்பு இன்று கேள்விக் குறியாக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில் எழுதப்பட்டுள்ள இந்நூல் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என நம்பலாம் இலக்கிய படைப்புகள் காலத்தின் கண்ணாடி என்பார்கள். அந்தவகையில் இந்நாவல் காலத்தின் தேவைகருதி எழுதப்பட்டதாகவே நான் பார்க்கிறேன்.

இதில் கூறப்பட்டுள்ள சம்பவங்கள், நிகழ்வுகள் பற்றி இன்றைய தலைமுறையினர் யாரும் அதிகம் அறிந்திருக்க மாட்டார்கள். இத்தகைய வரலாற்று சிறப்புகள் கொட்டியாரப்பற்று பிரதேசத்தில் இருந்துள்ளதை இந்நூல் மூலமாகவே அறிந்து நானும் ஆச்சரியப்பட்டேன். கொட்டியாரப்பற்றில் புதைந்துபோன ஒரு வரலாற்றுப் புதையலை அகழ்ந்தெடுத்து அதனை அனைவருக்கும் அறியப்படுத்தும் அரியதொரு முயற்சியில் ஆசிரியர் தன் முத்திரையை பதித்துள்ளார்.

ஒரு வரலாற்று நாவலை அதிலும் யதார்த்தமான சம்பவங்களை வைத்து எழுதப்படுகின்ற புதினத்தை படைப்பதென்பது எளிதான விடயமன்று. அதற்கான வாசிப்பு, ஆதாரம், முயற்சி, தேடல் என்பன பாரிய சுமையாகும். இதனை விட இக்காலகட்டத்திற்கான உரையாடல், சம்பவ விபரிப்பு என்பவற்றிற்கான சொல்லாடல்கள் போன்றவையும் மிக முக்கியமாகும். இவை யாவும் இந் நாவலில் விரவிக் காணப்படுகின்றமை ஒரு சிறப்பம்சமாகும்.

இதில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகள் சுமார் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்ததாகவே சித்தரிக்கப்பட்டுள்ளன. திருகோணமலை மாவட்டத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியியல் அமைப்பு, இடப்பெயர்கள், பயணமார்க்கங்கள் யாவும் இன்றுள்ளது போலவே அன்றும் காணப்பட்டதை இந்நூலில் அறியக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும் இந்நாவலின் நாயகனான இளஞ்சிங்கனின் தோற்றம், அந்நிய படையெடுப்பு, கண்டிப் பயணம், காதல், போர் போன்ற பல விடயங்களை அன்றைய கலாசார பண்பாட்டுச் சூழலோடு ஆசிரியர் நகர்த்திச் செல்லும் பாங்கு சங்ககால இலக்கியக் காட்சிகளை நினைவுபடுத்துவதாக உள்ளது.

இதனை வாசிக்கும்போது வன்னிமை சிற்றரசின் இளவரசர் இளஞ்சிங்கன், வெற்றிமாறன், தாமரை போன்ற கதாபாத்திரங்களுடன் நாமும் வாழ்வதுபோன்ற உணர்வு நிலையே மனதில் ஏற்படுகின்றது. புதிய சொற்பிரயோகங்களைக் கையாண்டு ஆற்றொழுக்கான நடையுடன் சுவைபட கதையைக் கூறும் ஆசிரியரின் எழுத்தாற்றல் மிகவும் பாராட்டும்படியாக உள்ளன.

இந்நாவல் ஒரு இளம்படைப்பாளியின் கன்னி முயற்சி என்பதனை நம்பமுடியாத அளவிற்கு நிறைவுடன் காணப்படுகின்றது. இவரிடமிருந்து இரசனையும், கலைத்துவமுமிக்க தரமான இலக்கியப்படைப்புகளை எதிர்காலத்தில் நாம் நிச்சயம் எதிர்பார்க்கமுடியும்.

இவரின் எதிர்கால இலக்கியப்பணி மென்மேலும் புகழுடன் தொடர எனது வாழ்த்துக்கள்.

நொக்ஸ் வீதி
மூதூர் - 05.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



மாயன்
இரா.ஸ்ரீஞானேஸ்வரன்

**வ**ணக்கம்!

தமிழர்களின் வரலாற்றைக் கட்டுரைகளாகவும், கதைகளாகவும் குறுந்தொடர்களாகவும் எழுதி அவற்றைப் புத்தகங்களாக எமக்காகவும், எதிர்காலச் சந்ததியினருக்காகவும் விட்டுச் செல்ல மிகச் சிலரே எம்முடன் இருக்கின்றனர். அவ்வாறான மிகச் சிலரில் ஒருவரே வைத்திய கலாநிதி சம்பூர் ஸதீஸ்!

அவர் என்னுடன் அறிமுகமாகிய பின்னர் இவ் வரலாற்றுக் குறுநாவல் எமது பத்திரிகையான "மலைமுரசில்" தொடராக வெளியாகியது.

திருகோணமலையில் சம்பூர் ஸதீஸ் மற்றும் தம்பலகாமம் ஜீவராஜ் ஆகிய இரு வைத்திய கலாநிதிகளும் வரலாற்றைத் தேடுவதிலும் அவற்றை எமக்காக எழுத்துருவாக்கித் தந்து, எதிர்வரும் சந்ததிக்காக விட்டுச் செல்வதிலும் முன்னிலை வகிக்கின்றனர்.

"ஒரு நாடு, இனம், மொழி, பண்பாடு, தனிமனிதன், தலம், பொருள், போர் எனப் பல இருந்தாலும், முக்கியமாகப் பார்க்கப்படுவது உலகில் மனித இனம் தோன்றிப் பரவிப் பெருகி அழிந்து தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் மாந்தரினங்களின் பழமை, தொன்மை, நாகரிகம், வாழ்வியல் என்பவற்றை எழுதுவதே வரலாறு" என வணக்கம்லண்டன்" (http://www.vanakkamlondon.com) என்ற வலைத்தளத்தில் வாசிக்கக் கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே எமது பழமை, தொன்மை, நாகரிகம், வாழ்வியல் ஆகியவற்றைத் தேட முயலும் பண்டைத் தமிழரின் வரலாறானது அக்கால மக்களின் நாளாந்த வாழ்வியலைப் பாடுவதைக் குறைத்துக்கொண்டு அக்காலத்தில் கோலோச்சிய மன்னர்களின் வீரதீரத்தையும், காதலையும் முன்கொண்டுவரும் முயற்சிகளையே எம்முள் இழையோடச்செய்துள்ளது.

அதன்பாற்பட்டு வரலாற்றை எந்த இலக்கிய வடிவத்திற்குள் அடக்கி மக்களுக்குப் படைப்பது என்பதில் காலத்திற்குக் காலம் வேறுபாடுகள் காணப்படுவதுடன் அவற்றை வரைபவர்களின் இரசனைகளுக்கேற்பவும் அவர்கள் தேர்வு செய்யும் இலக்கிய வடிவம் வேறுபட்டு நிற்கின்றது. அதன்போக்கில் தற்போது வரலாற்றைச் சுவை மிக்க கதைகளாக மாற்றும் முயற்சியின் படியொன்றாகவே இக்குறுநாவலை நான் பார்க்கின்றேன். "கொட்டியாபுரத்துச் சிங்கம்" என்ற இந்தக் குறுநாவலில் பேசப்பட்டுள்ள இடங்கள் எமக்கு மிகப் பரிச்சயமான இடங்களே. ஆனால் கதைமாந்தரோ எமது வரலாற்றில் எமக்காகப் போரிட்ட, ஆனால் எம்மால் நனவுலகில் எட்டமுடியாத மனிதர்கள்.

பரிச்சயமான இடங்களின் ஊடாகப் பரிச்சயமற்ற மாந்தர்களை உலாவச் செய்யும் ஸதீஸ், நாம் நனவுலகில் காண முடியாது என எவர்களை எண்ணிக்கொண்டிருக்கின்றோமோ அவர்களை எம் கண்முன்னே நிறுத்த முயற்சிக்கின்றார். அதில் அவர் பெற்ற வெற்றி கணிசமானது. இவ்வெற்றியினால் கவரப்படுகின்ற வாசகன் அந்த வரலாற்றுக் கதைமாந்தர் தொடர்பாக மேலும் அறிந்துகொள்ளத் தூண்டப்படுகின்றான். இவ்வாறு தூண்டப்படும் வாசகன் கொட்டியாபுர வரலாற்றை வாசிக்கத் தொடங்கிவிடுவான். ஸதீஸ் அதற்கான ஆரம்பத்தை தனது குறுநாவல் ஊடாக உருவாக்கித் தந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் முழு நாவலொன்றை உருவாக்கும் முயற்சிக்கும் இக்குறுநாவல் அடிப்படையாக அமையும் என்பது தெளிவு. அதனால் வரலாற்றுத் துறைசார் பங்களிப்பை இக்குறுநாவல் கொண்டிருப்பதைக் காணலாம்.

இக்குறுநாவலின் கதையோட்டத்தின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை பெரும்பாலும் எழுத்தாளன் கதைக்குள் இருந்து விடுபட்டு உரைஞர் (Narator) நிலையில் இருப்பதால் வாசகனும் கதையிலிருந்து விடுபட்டுப் போய்விடும் அபாயம் உருவாகிவிடுமோ என்ற அச்சம் எழுகின்றது. கதைமாந்தருக்கிடையிலான கதையோட்டத்தின் (Dialogues) ஊடாகவே வரலாற்றை சொல்வது இவ்வாறான ஆபத்தைக் குறைத்துவிடும் என்பதே என் வாசகக் கணிப்பு.

ஒன்றுபட்டுப் பொது எதிரிக்கு எதிராகப் போராடிய வரலாற்றுக்கால இனங்கள் நாம். ஆனால் இன்று இரண்டுபட்டு, அப் பொதுஎதிரியை நண்பனாக்கிக் கொள்ள முயற்சிக்கும் அவலம் எமது வரலாற்றின் கறைபடிந்த பக்கங்களாகத் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.

உண்மை நண்பர்களும், ஒருவருக்காக ஒருவர் போரிட்டவர்களுமான தமிழ்த்தேச இளஞ்சிங்கனையும், சிங்கள தேச இராசசிங்கனையும் இனியொருபோதும் எம்மால் காணமுடியாமல் போய்விடலாம். இதனால் இக்குறுநாவல் வரலாற்றின் ஒரு பொக்கிசமாகவே இருக்கும்.

என்றும் அன்புடன்!.

"மலைமுரசு"
இல.159ஏ, கடற்காட்சி வீதி
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



**வைத்திய கலாநிதி**
**அ. ஸதீஸ்குமார்**

**வ**ணக்கம்!

வரலாற்றுத் துறையில் எனக்கு ஏற்பட்ட ஆர்வம் காரணமாக எனது சம்பூர் மண்ணின் வரலாற்றை முதலில் பதிவு செய்து 2013ஆம் ஆண்டில் வெளியிட்டேன். இதற்காக பல நூல்களைத் தேடி வாசிக்கும் போது திருகோணமலை மாவட்டம் சார்ந்த பல வரலாற்றுத் தகவல்கள் என்னை வியக்க வைத்தன. அதிலே குறிப்பாக கொட்டியாபுரப்பற்று (மூதூர், சேருவில, வெருகல்) பிரதேசத்தை ஆட்சி செய்த **"இருமரபுந்துய்ய இளஞ்சிங்க வன்னிமை"** காலத்தில் (கி.பி 1600-1700) இங்கு இடம்பெற்ற சில சம்பவங்கள் இவ்வன்னியனார் நாட்டுப்பற்றும் தமிழ்ப்பற்றும் நிறைந்தவர் என்ற உணர்வை என்னுள் ஏற்படுத்தியது. இதுவே இச் சரித்திர குறுநாவல் பிறக்கக் காரணமாகும்.

இந் நாவலானது இளஞ்சிங்க வன்னியனார் ஒல்லாந்தப்படைகளுடன் போர் புரிந்து அதிலே வெற்றி பெற்று அவர்களை கொட்டியாபுரப் பகுதியில் இருந்து விரட்டியடித்தமை, வெருகல் சித்திரவேலாயுதர் காதல் என்னும் நூல் கண்டியரசன் இராசசிங்கன் முன்னிலையில் அரங்கேற தலைமை வகித்தமை ஆகிய இரு உண்மை சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்ட ஒரு கற்பனை கலந்ததாக அமைந்துள்ளது. எனினும் இங்கே செனரத் மன்னன், இராசசிங்கன், குமாரசிங்கன், விஜயபாலா, கொன்ஸ்ரான்ஸ்டைன் டீ சா மற்றும் வீரக்கோன் முதலியார் ஆகிய உண்மையான கதாபாத்திரங்களுடன் இக் கதை நகர்கிறது.

பல பிற்காலப் பரம்பரை வன்னிமைகளோடு தொடர்பு பட்ட நகரமாக மேன்காமம் ஆவணப்படுத்தப்பட்டுள்ளதனால் இதுவே இக் கொட்டியாபுரப்பற்றின் தலைநகரமாக இருந்திருக்க இடமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு இங்கு கூறப்படும் ஏனைய இடப்பெயர்களுள் அனேகமானவை இன்றளவும் உச்சரிக்கப்படுபவைகளாக உள்ளன. இவைகள் யாவும் கொட்டியாபுரப்பற்று பிரதேசத்தின் வரலாற்றுப் பதிவுகளாக அமையும் என்றெண்ணி மகிழ்கின்றேன். இது எனது முதலாவது நாவலாகையினால் ஏதும் தவறுகள் இருப்பின் தயைகூர்ந்து அறியத் தரவும். அது என்னை திருத்திக் கொள்ள உதவியாக இருக்கும் என்பதனை பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இக் குறுநாவலை 2014 ஆம் ஆண்டில் தொடர்ந்து இருபது வாரங்களாக தமிழ் மக்களின் கிழக்குப் பிராந்திய பத்திரிகையான மலைமுரசு பத்திரிகை "கொட்டியாபுரத்து சிங்கம்" என்னும் தலைப்பில் பிரசுரித்திருந்தது. என்னைப் போன்ற இளம் எழுத்தாளர்களுக்கு களம் அமைத்து உதவி செய்வதோடு மட்டுமல்லாமல் நேரிலும், தொலைபேசியிலும் தொடர்புகொண்டு மேலும் பல ஆக்கங்களைப் படைக்க உந்துசக்தியாக விளங்கும் மலைமுரசு பத்திரிகை ஆசிரியர், என் அன்புக்குரிய இரா.ஸ்ரீஞானேஸ்வரன் (மாயன்) அவர்களுக்கும் அப் பத்திரிகை ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந் நாவலுக்குரிய அட்டைப்படம் மற்றும் உட்படங்கள் ஆகியவற்றைச் சிரமம் பாராது தனது வேலைப்பளுவிற்கு மத்தியிலும் சிறப்பாக வடிவமைத்து உதவிய அன்புக்குரிய அதிபர் திரு.ம.சச்சிதானந்தம் அவர்களுக்கும், அணிந்துரையை வழங்கிய மலைமுரசு பத்திரிகை ஆசிரியரும், திருகோணமலை முத்தமிழ் சங்கத் தலைவருமாகிய இரா. ஸ்ரீஞானேஸ்வரன் அவர்களுக்கும், சிறப்புரையை வழங்கிய என் மதிப்பிற்குரிய முதுபெரும் இலக்கியவாதி கலாபூசணம் மூதூர் முகைதீன் அவர்களுக்கும், அறிமுக குறிப்பை வழங்கிய கலாபூசணம் திரு.வே.தங்கராசா அவர்களுக்கும், இந்நாவலை சிறந்த முறையில் பதிப்பு செய்த ஸ்ரீராம் பதிப்பகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

தமிழ் இலக்கிய வாசகசமூகம் இக்குறுநாவலை இன்முகத்துடன் ஏற்றுக் கொள்ளும் என்ற எதிர்பார்ப்புடன் இந்நாவலை திறக்கின்றேன்

"நன்றி"

**தேசமான்ய**

**Dr. அ. ஸதீஸ்குமார் (MBBS)**

**246. முருகன் கோவில் வீதி.**


**இலிங்கநகர். திருகோணமலை.**

077 224 7613 - (asatheeskumar@gmail.com)

சம்பூர்

திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வ
கொட்டியாரக் குடாக் கடல்
சம்பூர்
மூதூர்
மருதடிச்சேனை
கோயில் மலையடி
வங்காள விரிகுடாக் கடல்
பெரியவெளி
மேன்காமம்
இலங்கைத்துறை
வெருகல்
கொட்டியாபுரப்பற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூதக்கல்

வில்லுக் குளத்தின் பூதக் கல்லில் இருந்தவாறு சிந்தனையிலீடுபட்டுக் கொண்டிருந்த இளஞ்சிங்கனுக்கு நெஞ்சம் முழுவதும் நேற்றைய தினம் வன்னியனாரின் அரண்மனையில் நிகழ்ந்த நிகழ்வுகளே நிறைந்திருந்தன. இதற்கு முன்னரும் பல தடவைகள் அவன் சம்பூருக்கு வந்ததுண்டு. அப்போதெல்லாம் தன் அன்புத்தோழன் சத்யனுடனேயே இவ்விடத்துக்கு வந்து வில்லுக்குளத்தின் அழகிலும் அமைதியிலும் தங்களை மறந்து நாட்டு நடப்புகள் அடங்கலான பல விடயங்கள் பற்றிப் பேசுவது வழமையான நிகழ்வுகள்.

ஆனால் இன்றைய தினம் வில்லுக்குளம் அவனது கண்களுக்கு அமைதியாகவுமில்லை அழகாகவுமில்லை. குளத்திலிருந்து வரும் இளந்தென்றல் கூட அவன் தனிமைக்கு மகிழ்வானதாக அமையவுமில்லை. நிறைந்த நீரில் நாரைகளின் நேரிய தவக்கோலமோ, வெண்டாமரையின் நறுமணமோ, சில்லுத் தாராவின் சிலுசிலுப்புகளோ இளஞ்சிங்கனுக்கு சிறிதளவேனும் சலனத்தை ஏற்படுத்தவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையிலும் தன்னந்தனியாக நெடுந்தூரமிருந்து வந்தும் தனது சிறிய மாமனின் மாளிகைக்குச் செல்லாமல் அவருக்கும் கூடத்தெரிவிக்காமல் தனிமையை நாடி பூதக்கல்லுக்கு நடையிட்ட இளஞ்சிங்கனொன்றும் வலிமை மிக்க வாலிபனல்ல, இளம்பாலகனே.

தனக்குக் காவலாய் தன்னுடன் வந்திருந்த காவலர்களை மாமனின் மாளிகைக்கு அனுப்பி விட்டு, மறுதிசையில் திரும்பியவனைப் பார்த்த காவலர்கள்

"இளவரசே!"

என்றழைத்து தலைவணங்கி நின்றனர்.

"நீங்கள் செல்லுங்கள் நான் இன்னும் சிறிது நேரத்தின் பின் வருகின்றேன்"

என்று கூறி பதிலுக்குக் கூட காத்திராமல் அவ்விடத்தை விட்டகன்றான். காவலர்கள் அடிக்கடி இங்கு வருபவர்களாதலால் அவர்களுக்கு இப்பிதேசத்தின் நிலை நன்றாகத் தெரியும். வெற்றிமாறனின் ஒற்றர்கள் இங்குள்ள சந்து பொந்துகளிலெல்லாம் இருப்பார்கள் என்றும், இவ்வூர்மக்கள் இளவரசன் மீது மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டவர்கள் என்றும் அறிந்தவர்களாதலால் வாடிய முகத்தில் தேடிய புன்னகையை உதிர்த்து விட்டுச் செல்லும் இளஞ்சிங்கனை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு தங்கள் வருகையைத் தெரியப்படுத்த வெற்றிமாறன் மாளிகையை நோக்கி நடந்தனர்.

மாளிகையின் படலையினுள் பிரவேசித்த காவலர்களை உப்பரிகையிலிருந்து அவதானித்த வெற்றிமாறனுக்கு அவர்களணிந்த உடையைக் கொண்டு அவர்கள் மேன்காமத்து வன்னியனாரின் படைவீரர்கள் என ஊகித்தறிந்து அவர்களை நோக்கி வரலானான். அண்மித்ததும் காவலர்கள் தலைதாழ்த்தி வணக்கம் கூறி தாங்கள் கொண்டு வந்த செய்திமடலைக் கொடுத்ததோடு இளவரசன் செல்லுமிடத்தையும் கூறினர். அவர்களை அனுப்பிவிட்டு செய்தியைப் படிக்கலானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தம்பி வெற்றிமாறனுக்கு!,

இங்கு தற்போது சூழ்நிலை மகிழ்வுக்குரியதாக இல்லை. ஆதலால் இளஞ்சிங்கன் சிறிது காலம் உன் பொறுப்பில் இருக்கட்டும்.
இப்படிக்கு
வன்னிமை”

மடலை இடையில் செருகிய வெற்றிமாறன், தனது குதிரையை அழைத்து வரச்சொல்லி காவலரை அனுப்பினான். வந்த குதிரையில் தாவியேறியவன் மருதனை வரச்சொல்லி ஆளனுப்பி விட்டு குதிரையைத்தட்டி விட்டான். சம்பூரில் இளஞ்சிங்கனுக்கு பிடித்தமான இடம் பூதக்கல் என்ற படியால் நிச்சயம் அவன் அங்கு தான் போயிருக்க வேண்டும் என்றெண்ணி அவ்விடத்தை நோக்கி மிக வேகமாகச் சென்றான். அந்தி சாயும் நேரம் ஆரவாரமில்லாத சூழலில் குதிரைக் குளம்பொலி கேட்டு இளஞ்சிங்கன் திரும்பிப் பார்க்கவும் புரவியானது அருகில் வந்து நிற்கவும் சரியாகவிருந்தது. மாமனை இரு கரமெடுத்து வணங்கிய மருமகனை குதிரையின் பின்னால் ஏறும்படி சைகை காட்ட, குதிரை இருவரையும் சுமந்தவாறு மாளிகையை நோக்கி விரைந்தது.

வருங்கால கொட்டியாரப்பற்று வன்னிமையும் தற்போதைய இளவரசுப்பட்டத்துக்குரியவனுமாகக் கருதப்பட்ட இளஞ்சிங்கன் வருகையின் நிமித்தம் மாளிகையில் விருந்து தடபுடலாக ஏற்பாடு செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. குளியலை முடித்துவிட்டு இராப்போசனத்தில் அமர்ந்த மாமனுக்கும் மருமகனுக்கும் இளஞ்சிங்கனின் அத்தை உணவு பரிமாறிக் கொண்டிருந்தவாறே அரண்மனையில் உள்ளவர்களின் சுகநலன்களைப் பற்றி அளாவிக் கொண்டிருந்தனர். வுழக்கமாக இங்கு வரும் போதெல்லாம் மிகவும் கலகலப்பாகக் காணப்படும் மருகப்பிள்ளை இன்று வழக்கத்துக்கு மாறாக அமைதியாக இருப்பதை அவதானித்த அத்தை ஏதோ ஒரு விடயம் அவனைப் பாதித்திருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு அவனின் வாட்டத்தைப் போக்க பல சுவையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவங்களைப் பற்றி பேச்சுக் கொடுத்துக்கொண்டேயிருந்தார். இவ்விராப் போசனம் முடியும் தறுவாயில் காவலனொருவன் உள்ளே வந்து வெற்றிமாறன் அனுமதிக்காக காத்துக்கொண்டிருந்தான். அவனிடம் ஒற்றர் தலைவன் மருதன் ஆலோசனை மண்டபத்தில் காத்துக்கொண்டிருக்கும் செய்தியை அறிந்ததும், இரவுணவை முடித்துக் கொண்டு இளஞ்சிங்கனையும் அழைத்துக் கொண்டு அங்கு நுழைந்தார் தளபதி வெற்றிமாறன்.

அவ்விருவரைக் கண்டதும் எழுந்து வணக்கம் செலுத்திய ஒற்றர் தலைவனை அமரும்படி சைகை காட்டி விட்டு தளபதி தனது பேச்சைத் தொடங்கினார்.

"கொட்டியாபுரப்பற்றின் வருங்கால இளவரசே! இவர் பெயர் மருதன். எனது முழு நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். கொட்டியாபுரப்பற்றுவடக்குப் பகுதியான எனது எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் தலைமை ஒற்றன். எனது தமையனான வன்னியனாரினால் அரசவைக்கு அழைக்கப்பட்டு பாராட்டுப் பெற்றவர்."

என்றெல்லாம் மருதனை அறிமுகப்படுத்திவிட்டு, தனக்கு வந்த செய்தியையும் கூறி, அரசசையில் நிகழ்ந்த எச்சம்பவத்தால் இந்நிலை ஏற்பட்டது என்று கூறுமாறு இளஞ்சிங்கனைக் கேட்டார். அவனும் தான் அவையிலிருந்த போது நடந்த அந்த எதிர்பாராத சம்பவத்தைக் கூறத்தொடங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச கட்டளை

வழமைபோல அரசவை நிகழ்வுகள் நேற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, திடீரென காவலனொருவன் கண்டியரசின் தூதுவர் வன்னிமையைக் காண காத்துக் கொண்டிருப்பதாகக் கூறினான். தூதுவனை அழைத்து மரியாதை செய்து ஆசனமளித்த வன்னியனார் அவன் வந்த காரியத்தை என்னவென்று வினவினார். அவனும் வன்னிமைக்கு முகமன் கூறி தான் வந்த சேதியைத் தெரிவித்து ஒரு செய்திமடலையும் நீட்டினான். அதை வாங்கிப் படித்ததும், ஒருகணம் அதிர்ச்சியடைந்தவர் அதை வெளியிற் காட்டிக் கொள்ளாதவாறு, தூதுவனை உபசரித்து வழியனுப்பும் படி கட்டளையிட்டு, அரசவை நிகழ்வுகளை தொடர்ந்து நடத்தி நிறைவு செய்தார்.

அரசவை நிறைவு பெற்றதும் தலைமை மந்திரி, சேனாதிபதி மற்றும் தலைமை ஒற்றன் ஆகியோரை மாத்திரம் அழைத்து மடல் பற்றி ஆலோசனைக் கூட்டம் நடாத்தினார். இடையிடையே அரசவைக்குச் செல்லும் நான் அன்றும் அங்கிருந்தேன். மாமனார் என்னையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகே உட்கார வைத்து ஆலோசனைகளிலீடுபட்டார்.

பின்னர் சேனாதிபதியிடம் மடலைக் கொடுத்து, அதை வாசிக்கும் படி கூறினார். அவரும் அதை வாங்கிப் படிக்கலானார்.

"மதிப்புக்குரிய கொட்டியாபுரப்பற்று வன்னிமைக்கு,

தாங்கள் கண்டியரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு மாறாக, பறங்கியருடன் சேர்ந்து கண்டியரசுக்கு எதிராக நடைபெறும் சூழ்ச்சியில் பங்கு கொள்வதாக அறிகின்றோம். இதனால் கண்டி அரசசபைக்கு சமூகமளித்து விளக்கமளிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

-கண்டியரசு-

சலித்துக்கொண்ட வன்னியனார் "கொட்டியாபுரப்பற்று இராச்சியம் கண்டியரசுடன் நட்புக் கொண்டிருக்கும் இத் தருணத்தில் ஏன் இப்படியொரு அரச கட்டளை? எனது படைவீரர்களால் எனக்குத் தெரியாமல் ஏதேனும் அசம்பாவிதங்கள் இடம்பெற்றனவோ? எனக் கூறி ஆதங்கப்பட்டார்.

அதனை மறுத்த தலைமை ஒற்றன் "இல்லை அரசே அப்படியொரு அசம்பாவிதங்களும் இடம்பெற்றதாகத் தகவல் இதுவரை இல்லை. ஆனால் நாங்கள் ஒரு பொறிக்குள் மாட்டிக்கொண்டுள்ளோம்"

என்று கூறி தான் அறிந்தவற்றைச் சொல்லத் தொடங்கினான். "பறங்கியர்கள் இன்று யாழ்ப்பாணம், கோட்டை, திருகோணமலை இராச்சியங்களை தமது வஞ்சக சூழ்ச்சிகளின் மூலம் கைப்பற்றிவிட்டனர். தற்போதைய நிலையில் கண்டி இராச்சியம் ஒன்றே மிகவும் பலம் வாய்ந்த நிலையில் பறங்கியர்க்கெதிராக தன்மானத்தோடு போராடிக் கொண்டிருக்கின்றது. அத்தோடு நமது இராச்சியமும், மட்டக்களப்பு, சம்மாந்துறை, போரதீவு, சிங்காரவத்தை, தம்பலகாமப்பற்று, அடங்காப்பற்று போன்ற வன்னி இராச்சியங்களும் பறங்கியருக்கு எதிரானதாகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பறங்கியர் தமது சூழ்ச்சிகள் மூலம் எம்மவர்களிடையே காணப்படும் குரோதங்களைத் தூண்டிவிட்டு, ஒருவரோடொருவரை மோதவிட்டு இறுதியில் ஆட்சியையே அபகரித்து விடுவதாகத் தான் கேள்விப்படுகின்றேன். இது தான் நடந்தும் வருகின்றது. ஆனால் கண்டியரசு தனது மேலாண்மையை ஏற்றுக்கொண்டிருக்கிற நிலையிலுள்ள சிறிய இராசதானிகளை பறங்கியருடன் நட்புப் பாராட்டாத வகையில் மிகவும் அவதானித்துக் கொண்டிருக்கின்றது. அத்தோடு பறங்கியரை இலங்கைத் தீவிலிருந்து முற்றாக வெளியேற்றுவதற்காக உலாந்தாக் காரரோடு உறவுகளையும் ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகவும் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதன் ஒரு அம்சமாகவே கொட்டியாரத் துறையில் கோட்டை கட்ட உலாந்தாக்காரரை அனுமதிக்குமாறு சில நாட்களுக்கு முன் தங்களுக்கு வந்த செய்தி அமைந்துள்ளது.

இவ்விருவருடைய நட்பைப் பொறுக்காத பறங்கியர் உலாந்தாக் காராரோடு சண்டையிட்டு தளபதி பொஸ்கோவனுடைய ஆட்களை படுகொலை செய்ததோடு உலாந்தாக்காரரின் கொட்டியாரக் கோட்டையையும் கைப்பற்றினர்.[1] கண்டியரசனும் ஆங்காங்கே பறங்கியர்களுடன் சண்டையிட்ட வண்ணமே உள்ளான்.

அண்மையில் கிடைத்த தகவலின் படி பழுகாமத்து வன்னிமையை பறங்கியர் விரட்டியும், ஆசை வார்த்தைகள் பல கூறியும் வன்னிமையுடன் இரகசிய ஒப்பந்தமொன்றையும் செய்தனர். இதை கண்டியரசன் அறிந்திருக்கலாம். தனக்கெதிராக நடைபெறும் சூழ்ச்சிகளில் பறங்கியருடன் சேர்ந்து கொட்டியாபுரப்பற்று வன்னிமையாகிய தாங்களும் இணைந்திருக்கலாம் என்று சந்தேகப்பட்டு தங்களை கண்டி அரசவைக்கு சமூகமளிக்குமாறு ஓலை அனுப்பப்பட்டிருக்கலாம் என்றும் இது தனது ஊகம் மட்டுமே" என்று கூறினான்.

1 "திருகோணமலை கொட்டியார் என்னுமிடத்தில் கி.பி. 1612ல் போர்த்துக்கேயர் சிமோவ்கெரியா தலைமையில் ஒல்லாந்துத் தளபதி பொஸ்கோவனின் ஆட்களை படுகொலை செய்தனர்."
(இலங்கை வரலாறு - பாகம் II, பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா - பக்.125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை ஆமோதித்த எமது அரசர்

"நாம் தற்போது கண்டியரசுடன் பகைமை காட்டும் நிலையிலில்லை என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது. அத்தோடு பறங்கியருடன் சேர்ந்து நாட்டைத் தாரைவார்க்கும் நிலையிலுமில்லை. ஆனால் இப்போது முளைத்திருக்கும் இப்புதிய சிக்கலில் தான் அகப்பட்டிருப்பது பற்றியும், தானும் தனது நாட்டு மக்களும் கண்டியரசால் அழிக்கப்படாது இருக்க வேண்டுமனால் தான் கட்டாயம் கண்டிக்குச் சென்றேயாக வேண்டும்"

என கூறிய போது அதை மறுத்த மந்திரியும் சேனாதிபதியும் "தங்களுக்கு கண்டி மன்னனால் ஏதும் துர்சம்பவங்கள் நிகழ்ந்தால் கொட்டியாபுரப்பற்று நாட்டுக்கு தலைவனுமில்லை. அதுமட்டுமல்லாது தங்கள் மருமகப்பிள்ளைக்கு இன்னும் இளவரசர் பட்டம் கட்டும் வயது கூட வரவில்லை. ஆகவே நாட்டு மக்களின் நலன் கருதி தங்களின் கருத்தை மாற்றி, தங்களின் சார்பாக வேறுயாரையாவது அனுப்பலாம்"

என்று அறிவுறுத்தினர். முதலில் மறுத்த வன்னிமை பின்னர் அக்கருத்தை ஒருவாறு ஏற்றுக் கொண்டார். கண்டியரசனும் நம்பும் விதமாக இது அமைய வேண்டும் என்று சிந்தித்தவாறு காராளசிங்கனை அனுப்புவது என்று முடிவாகியது.

உடனடியாக திருமங்கலாயில் இருக்கும் தனது மகளின் கணவனான காராளசிங்கனுக்கு மேன்காமத்துக்கு வருமாறு தகவல் தெரிவிக்கப்பட்டது. மருமகன் வந்தவுடனேயே விடயத்தைக் கூறிய அரசன் இச்சிக்கலைத் தீர்க்க உடனே கண்டிக்குப் பயணமாகுமாறு கூறினான். தான் நோய்வாய்ப்பட்டிருப்பதன் காரணமாக தன்னால் கண்டியரசவையில் சமூகமளிக்க முடியாதிருப்பதையும், அதனால் தனது சார்பாக தனது மருமகனை அனுப்புவதாகவும் கடிதம் எழுதப்பட்டு கொடுத்தனுப்பட்டதாக இளஞ்சிங்கன் தெரிவித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காராளசிங்கன் கண்டிக்குப் புறப்பட்ட போது தொடங்கிய மைத்துணியின் அழுகை இன்னமும் தொடர்ந்து கொண்டிருப்பதாகக் கூறிய இளங்சிங்கன் "தான் வளர்ந்ததும் தனது முதல்வேலை இந்தப் பறங்கியரை கொல்வதே"

என்று ஆத்திர மேலீட்டினால் அழுது கொண்டே கூறினான். அவனை அணைத்துக் கொண்ட வெற்றிமாறன்

"குழந்தாய்!

அழாதே எல்லாம் நல்லதே நடக்கும் என்று நம்பிக்கை வைப்போம். நாளை செவ்வாய்க்கிழமை விடிந்ததும் எம் குலதெய்வமாகிய பத்திரகாளி கோயிலுக்குப் போய் வேண்டுதல் செய்வோம்"

என்று கூறியதுடன் மருதனை விழிப்பாக இருக்குமாறு ஆலோசனை வழங்கி அனுப்பி வைத்தார்.

படுக்கையில் புரண்டு புரண்டு நித்திரை வராமல் சிந்தனை வசப்பட்ட இளஞ்சிங்கன் மறுநாள் சாரளத்தினூடு வந்த சூரிய ஒளியின் சூடுபட்டே நித்திரை கலைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டியில் கொட்டியாபுரப் பிரதிநிதி

குன்றும் குழியுமான பிரதேசத்தை தமிழில் கண்டி என்று அழைப்பர். சில்லென்ற குளிரில் சீதளத்தென்றல் தவழ்ந்து வரும். மெல்லிய வெயிலில் மேனிக்கோ சூரியக்குளியல். மலைமகளின் மழலை மாவலியாளின் பிரவாகத்தைக் காண இரு கண்கள் போதாது என்று கூறும் தமிழறிஞர்களின் மனங்கவர் கண்டியைக் காண விழைந்த காரளசிங்கன், மாமனான வன்னியனார் கொடுத்தனுப்பிய தகவலுடன் கண்டி நகர் பற்றி கற்பனை செய்து கொண்டிருந்தான்.

இதுவே முதலாவது கண்டிப் பயணமாகையால், கண்டி இராசதானி எப்படியிருக்கும், கண்டியரசன் செனரத் எப்படியிருப்பான், அங்கு நிலைமைகள் தனக்கு சாதகமாக இருக்குமோ என்றெல்லாம் எண்ணியவாறு தன் மீது பாரிய பொறுப்பு சுமத்தப்பட்டிருப்பதை உணர்ந்து நிதானமடைந்தான். மேன்காமத்திலிருந்து புறப்பட்டு மூன்றாம் நாள் கண்டி இராசதானியை அடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடத்தின் மலைவளத்தையும், நதிவளத்தையும் பார்வையிட்டுக் கொண்டே அந்திசாயும் வேளையில் அரண்மனை வாசலை அடைந்து கண்டியரசனுக்கு கொட்டியாரப்பற்று வன்னிமையின் சார்பாக தான் மன்னனைச் சந்திக்க வந்திருக்கும் தகவலை சொல்லியனுப்பினான். சிறிது நேரத்தின் பின் திருப்பிய அரண்மனைக் காவலர்கள், காராளசிங்கனிடம்

“நாளை காலை அரசவையில் அரசன் சந்திக்கும் எண்ணம் கொண்டிருப்பதாகவும், அன்றிரவு விருந்தினர் விடுதியில் தங்கியிருக்குமாறும் அங்கே தங்களுக்குரிய வசதிகள் அனைத்தும் செய்யப்படும்” என்றும் கூறி தங்களில் ஒருவனை அழைத்துச் செல்லுமாறு பணித்தனர்.

அங்கே களைப்பு மேலீட்டினால் தன்னோடு வந்த வீரர்கள் உறக்கம் கொண்டிருந்த போதும் காராளசிங்கனால் உடனேயே உறக்கம் கொள்ள முடியவில்லை. அவன் நாளை நடைபெறப்போகும் நிகழ்வுகளை கற்பனை செய்து கொண்டேயிருந்தான். தான் எவ்வாறு மன்னனுடன் உரையாட வேண்டும் என்றும் மனனம் பண்ணினான். சிறிது பிசகு நேரிட்டாலும் பெருந்தவறு ஏற்பட்டுவிடும் என்று அவன் மனம் பதட்டப்பட்டுக் கொண்டேயிருந்தது. சிறிது நேரத் தூக்கத்தின் பின் பொழுது புலர்வதற்கு முன்னரே நீராடி அரண்மனை செல்வதற்குரிய ஆயத்தங்களை மேற்கொண்டான். மாமனார் கொடுத்தனுப்பிய மடலையும் சரிபார்த்துக்கொண்டான்.

அரண்மனைக் காவலர் வந்து அழைத்ததும், தன்னுடன் வந்த வீரர்களை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு அரசவை நோக்கி அவர்களுடன் நடக்கத் தொடங்கினான். அரசவைக்குள் நுழைந்ததும் அரண்மனை வாயிற்காவலன் தான் வரும் செய்தியை உரக்கக் கூறியதும் அனைவரும் தன்னையே உற்றுக் கவனித்ததைக் கண்டான். மன்னனின் நேரிய பார்வை தன்னை ஒரு கணம் நிலைதடுமாறச் செய்ததை நினைத்து, இவன் பறங்கியருக்கு சிம்ம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொப்பனந்தான் என்றெண்ணியவாறு தன்னை சுதாகரித்துக் கொண்டவன் சிம்மாசனத்திலிருந்த மன்னனை வணங்கிவிட்டு நின்றான். அங்கே சிறிது நேரம் நிசப்தம் நிலவியது.

மன்னன் சைகைகாட்டியதும் செய்தி வாசிப்போன் மடல் ஒன்றைப் பார்த்து தமிழில் வாசிக்கத் தொடங்கினான்.

"கண்டி மக்களின் காவலர், பறங்கியரை புறமுதுகிட்டோடச் செய்து வருகின்ற கண்டி இராசதானியின் மாமன்னன் செனரத் மகாராஜா அவர்களுக்கு எதிராக கொட்டியாரப்பற்று வன்னிபம் கிளர்ச்சி ஏற்படுத்துவதற்கான சூழ்ச்சியில் இன்னும் சிலருடன் இணைந்து பங்கு கொண்டிருந்ததாக அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது."

என்று கூறிவிட்டு நிறுத்தினான். அதைத் தொடர்ந்து செனரத் மன்னனும்

''கொட்டியார வன்னிபத்துப் பிரதிநிதியே உமது கருத்தைத் தெரிவிக்கலாம்''

என கூறினார். இங்கு தமிழிலேயே கருத்தாடல்கள் நிகழ்ந்ததனால் சிங்கள மொழி தெரிந்திருந்தும் காராளசிங்கன் தமிழர் தேசத்து வழக்கு என்பதால் தமிழிலேயே விசாரணைகள் நடைபெறுவதாக நினைத்துக் கொண்டு தமிழிலே தனது கருத்தை தெரிவிக்கத் தொடங்கினான்.

"எங்களுடைய ஈழத்தின் தன்மானத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்ற பெருமை மிகுந்த கண்டி இராசதானியின் ராஜாவே! உமது ஆட்சிக்குட்பட்ட கொட்டியாரப்பற்றின் வன்னிபம் அவர்கள் என்றுமே தங்களுடைய ஆணையை ஏற்றுக்கொண்டே பரிபாலனம் செய்து வருகின்றார்கள். அவர் தமது சீரற்ற உடல் நிலையை கருத்திற் கொண்டு அவருடைய மருமகனான காராளசிங்கன் ஆகிய என்னை தனது சார்பாக தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிலையில் சமூகம் செய்து தன்னை அழைத்ததற்கான காரணங்களை அறிந்து வருமாறு அனுப்பியுள்ளார்.''

என்று தெரிவித்ததோடு வன்னிமையால் கொடுத்தனுப்பப்பட்ட மடலையும் மன்னனுக்குக் கையளித்தான்.

மடலை படித்த மன்னன் முகத்தில் திருப்தியை கண்ட காராளசிங்கன் தனது பணி இனிதே நிறைவேறுகின்றது என உள்ளூர நினைத்து உவகை கொண்டான்.

மடலைப் படித்து விட்டு நிமிர்ந்த செனரத் மன்னன்,

"காராளசிங்கனே உமது வருகையும் பதிலுரையும் எம்மைத் திருப்தி கொள்ளச் செய்தன. நீர் விருந்தினர் மாளிகையில் தங்கியிருக்கலாம். நாம் மீண்டும் சந்திப்போம்''

என்று கூறி வழியனுப்பினார். சிறிது நேரத்தின் பின் அரசவை கலையச் செய்து மந்திரியோடு உரையாடிய வண்ணம் அரசவையை விட்டு வெளியேறினார்.

இருள் சூழத் தொடங்கிய போது அரண்மனையில் இருந்து அழைப்பு வராததனால் காராளசிங்கன் மனம் குழப்பமடையத் தொடங்கியது. மீண்டும் மீண்டும் அரசவை நிகழ்வுகளை நினைவுபடுத்திக் கொண்டேயிருந்தான். நீண்ட நேரமாக வாயிற்புறமாகவே பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு காவலர் இருவர் தன்னை நோக்கி வருவதைக் கண்ட பின்னரே, வன்னிமையின் பரிசுப் பொதியை எடுத்துக் கொண்டு அவர்களுடன் அரண்மனைக்குள்ளே புகுந்தான். அங்கே கண்டியரசனைக் கண்டதும் தலை தாழ்த்தி வணங்கினான். மன்னரும் கொட்டியாபுரப்பற்று, திருகோணமலை, தம்பலகாமப்பற்று, பறங்கியர்கள் கட்டும் கோட்டைகள், உலாந்தாக்காரரின் நடவடிக்கைகள், வன்னிபத்தின் சுகங்கள் முதலியவைகளை கேட்டறிந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டியாரத்திலுள்ள கொட்டியாரத்துறை மற்றும் இலங்கைத் துறை முதலியவற்றின் முக்கியத்துவம் காரணமாக கண்டி மன்னனுக்கு இயல்பாகவே கொட்டியாரப்பற்றின் மேல் ஒரு தனிப் பார்வையுண்டு. இதனால் காரளசிங்கனிடம் கொட்டியாரப்பற்றில் பறங்கியரின் நடவடிக்கைகளை உடனுக்குடனே தனக்கும் தெரியப்படுத்துமாறு வன்னிபத்துக்கு கூறவும் சொன்னார். வன்னிபம் தனக்கனுப்புவித்த முத்துப் பதித்த தங்கப் பதக்கத்தைப் பெற்ற செனரத் மன்னன் அதற்கு நன்றி கூறியதோடு, தனக்குப் பின் கண்டி இராசதானியை ஆளும் தன் புதல்வர்களுக்கும் கொட்டியார வன்னிபம் துணையாகவிருக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்தான். பின் வன்னிமைக்காக வைத்திருந்த மடலையும் கொடுத்து நாளை பொழுது புலர்ந்ததும் பயணத்தைத் தொடருமாறு கூறி வன்னிமைக்கு தனது அன்புப் பரிசாக தனது முத்திரை பதித்த இரத்தின மாலையொன்றையும் கொடுத்தனுப்பினான்.

பொழுதும் புலர்ந்தது. இதற்காகவே காத்திருப்பவன் ஆகையால் தனது வீரர்களுடன் புரவி மீதேறி கண்டியழகை அள்ளிப் பருகியவாறு ஆனந்த மேலீட்டினால் மிக விரைவாக புரவியைச் செலுத்தி இரண்டாம் நாள் அந்தி நேரத்தில் மாமனாரான வன்னிபத்தைச் சந்தித்து நடந்தவைகளைக் கூறி கண்டியரசன் கொடுத்தனுப்பிய இரத்தினமாலையையும் கொடுத்த பின்னர் தன் துணைவியைத் தேடி மாளிகைக்குள் நுழைந்தான். ஆனந்த மேலீட்டினால் அவனை ஆரத் தழுவி அன்பு முத்தங்களைப் பதித்த இளையவல்லி அவன் மார்பில் முகம் புதைத்தாள். இருவரும் ஒருவரையொருவர் பார்த்தவாறு இவ்வுலகம் மறந்து காதலேகிக் கண்ணீர் மல்கி கசிந்துருகினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் தகர்ப்பு

காலம் பல உருண்டோடியது. வன்னியனார் இளஞ்சிங்கனுக்கு இளவரசுப் பட்டங்கட்டி கொட்டியாபுரப்பற்று வடக்குப் பிரதேசத்தின் நிர்வாகத்தையும் கொடுத்தார். அகவை ஐந்தாயிருக்கும் போதே நாட்டுப்பற்று மிகுந்து காணப்பட்ட இளஞ்சிங்கனின் மனமும், பறங்கியர் மேலான வெறுப்பும் வரவர வளர்ந்து கொண்டேயிருந்தது.

இதற்கு சிகரமாய் அமைந்தது போல திருகோணமலையில் நிகழ்ந்த ஒரு சம்பவம் அவன் மனதை வெகுவாகப் பாதித்தது. அது கோணேசர் கோயிலை பறங்கியர் இடித்தழித்த செய்தியாகும். இச்செய்தி கேட்ட இளவரசன் இளஞ்சிங்கன் நம்பவும் முடியாமல் இப்படிப்பட்ட ஒரு கெடுதியான காலத்தில் வாழ்கின்றோமே என எண்ணங்கொண்டவனாய், தனது வெண்புரவி மீதேறி காற்றிலும் கடுதியாய் தோணிக்கல் கடற்கரையை நோக்கி விரைந்தான். ஏனெனில் அவன் அங்கிருந்தவாறே திருக்கோணேஸ்வரப் பெருமானை வணங்குவது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிருந்து பார்க்கும் போது தெட்சண கைலாசத்தின் தோற்றம் மிகத் தெளிவாகத் தெரியும். அதிலும் மூன்று இராஜகோபுரங்களும் வண்ணமயமாக சோலைக்குள் இருப்பது போலத் தோன்றும்.

இன்று அவனால் அக்காட்சியைக் காண முடியவில்லை. வெறும் மரங்கள் மட்டுமே தெரிந்தன. கோபுரங்களைத் தேடினான். அப்போது தான் கேள்விப்பட்ட சம்பவங்களை நினைத்துப் பார்த்து குளக்கோட்டன் ஆணை என்று கூறப்படும் பாடலையும் நினைவுபடுத்திப் பார்த்தான்.

"மாறாத புனல் பாயும் திருக்குளமும் வயல்வெளியும் வருந்திச்செய்தே
வீறாக என்மரபோர்க்கு ஈயாமல் கோணமலை விமலர்க்கு ஈந்தேன்
பேறான பெரியோரே இதற்கழிவு நினைப்பவர்கள் பெட்பு நீங்கி நீறாகப்போவர்
இது நிச்சயம் நிச்சயம் கோணமலை நிமலராணை"

கோணேசப் பெருமானை மனதார வணங்கிவிட்டு கலங்கிய கண்களில் நீரைத் துடைத்துவிட்டு நிமிர்ந்தவன் அலைமேவும் ஆழியிலே துரும்பு தென்படுவது போன்று தூரத்தே சிறிய வத்தைகளில் மக்கள் ஒருசிலர் வருவதைக் கண்டான். வத்தையானது அருகே வரும் போது அதிலே பெரியவர்களும் சிறியவர்களுமாய் ஐந்தாறு போர் இருப்பதைக் கண்டான்.

அவர்களிடம் "நீங்கள் யார்? என்ன நடந்தது, ஏன் இவ்வாறு ஆழ்கடலிலே உயிரைப் பணயம் வைத்துப் பயணம் செய்கின்றீர்கள்? என வினாக்களைத் தொடுத்தான்.

அவர்களுள் முதியவரொருவர் முன் வந்து, இளவரசனை அடையாளங்காண முடியாமல்

"குழந்தாய்!

என விளித்து தழுதழுத்த குரலில் திருகோணமலையில் சில தினங்களுக்கு முன் நிகழ்ந்த சம்பவங்களை கண்ணீருடன் கூறத் தொடங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்று உச்சிகாலப் பூசை திருக்கோணேஸ்வரப் பெருமானுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது சிவனடியார்கள் வேடத்தில் புகுந்த கயவர்கள் சிலர் கோயிலைக் கொள்ளையடித்துச் சூறையாடினர். இது நிகழ்ந்து சில நேரத்துக்குள் பெரும்படையொன்றுடன் கோயில் மலைக்கு வந்த பறங்கிக் கூட்டத்தினால் கோயில் கட்டடங்கள் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டது.[(2)] அத்தோடு அங்கு வழிபாடியற்றிக் கொண்டிருந்த மக்கள் பறங்கிப் படையினரால் வாளால் வெட்டியும், சூடுகலன்களால் சுட்டும் துன்புறுத்தப்பட்டனர். மக்கள் கூட்டம் கூட்டமாக கையில் அகப்பட்ட கோயில் திருவுருவச் சிலைகளை எடுத்துக் கொண்டு ஓடினர். அப்போது நானும் எடுத்த ஒரு சிலையைக் கொண்டு வந்துள்ளேன்" என்று கூறி கையிலிருந்த சிறிய பிள்ளையார் சிலையொன்றைக் காட்டினார்.

அது மிகவும் அழகாயிருந்தது. புராதன காலத்து தமிழர்களின் கலைத்திறமையை அது எடுத்துக்காட்டியது.சிலையை இரசித்துப் பார்த்த மன்னன் தனது உறவினரான பூபால வன்னிமையைப் பற்றி விசாரித்தான்.

அதற்கு அப்பெரியவர் "பறங்கிப் படைகளுடன் இறுதிவரை சளைக்காது வீரப்போர் புரிந்த பூபால வன்னியனார் வீரசுவர்க்கம் எய்தியதாகவும், பறங்கிப் படைகள் பூபாலக்கட்டு மாளிகையைச் சூறையாடி தீக்கிரையாக்கியதாகவும், இளவரசர் தம்பலகாமப் பற்றுக்கு தப்பிச் சென்றதாகவும் பேசப்படுகிறது" என்று கூறி விட்டு, "நாங்கள் பறங்கியருக்குப் பயந்து கொட்டியாபுரப்பற்றில் வாழும் நோக்கத்தில் எங்கள் உயிரையும் பொருட்படுத்தாது கடல் வழியாக வந்தோம்" என்றார்.

2. போர்த்துக்கீசத் தளபதி கொன்ஸ்ரான்ஸ்டைன் டீசா தலைமையிலான படை சென்னையிலிருந்து சித்திரை மாதம் 1623 இல் மன்னாருக்கு அனுப்பப்பட்டு பின் அங்கிருந்து யாழ்ப்பாணம் சென்று பின்னர் திருகோணமலையை வந்தடைந்து திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை 1624 இல் முற்றாக இடித்து தரைமட்டமாக்கி திருகோணமலைக் கோட்டையைக் கட்டினர்.
(காலனித்துவ திருகோணமலை- கனகசபாபதி சரவணபவன், பக். 29 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக அவர் கோணேசப் பெருமான் இல்லாத அப்பூமிக்கு இனி நாங்கள் போகமாட்டோம் என்று கூறி உடல் தளர்ந்த நிலையில் தரையில் சாய்ந்தார். பிள்ளையார் சிலையும் நிலத்திலே வீழ்ந்தது.

அப்பெரியவருக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறிய இளவரசன் தன்னைப் பற்றிக் கூறியதோடு,

"இவ்வூரின் பெயர் சம்பூர். இங்கு எவ்வித கவலையுமில்லாது இங்குள்ள மக்களோடு நீங்கள் சேர்ந்து வாழலாம் என்று உறுதிமொழி கொடுத்தார். அதுமட்டுமல்லாது கோணேசர் கோயிலிலிருந்து எடுத்து வந்த இப்பிள்ளையார் சிலையை இக்கோயிலில் வைத்து வழிபாடு செய்யுங்கள் என்று கூறி அருகிலிருந்த பிள்ளையார் கோயிலை சுட்டிக் காட்டினார்."

அன்று முதல் கோணேசப் பிள்ளையாருக்கு பூசை வழிபாடுகள் கிரமமாக நடந்து வரலாயிற்று.

இம்மக்களை அழைத்துக் கொண்டு சம்பூரின் ஒரு பகுதியில் குடியிருக்க வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்து ஆதரித்தான் இளவரசன் இளஞ்சிங்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்லாமியர்களின் கொட்டியாபுர வருகை

கிழக்குப் பிரதேசம் தவிர்ந்த நாட்டின் ஏனைய கரையோரப் பிரதேசங்களை ஆக்கிரமித்து ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற போர்த்துக்கீசரால் அடித்துத் துரத்தப்பட்ட இஸ்லாமிய மார்க்கத்தை தழுவிய மக்கள் கூட்டத்தை கண்டி அரசன் ஆதரித்திருந்தான்.

அவர்களுள் குறிப்பிட்ட அளவு எண்ணிக்கையிலான மக்களை மட்டக்களப்பு, கொட்டியாபுரப்பற்று பிரதேசங்களில் குடியமர்த்துமாறு[3] கோரி அனுப்பப்பட்ட தகவலைப் படித்துக் கொண்டிருந்த வன்னியனார் எதிர்காலத்தில் இப்பிரதேசத்தில் ஏற்படப்போகும் நிகழ்வுகளை எண்ணி கவலை கொண்டவாறு படைத் தலைவனை அழைத்து வருகின்ற மக்கள் கூட்டத்தை குடியமர்த்துவதற்கான இடங்கள் பற்றி ஆராய்ந்தார்.

3. போர்த்துக்கீசரால் 1626 இல் இலங்கையின் மேற்குக்கரை துறைமுகங்களில் இருந்து கலைக்கப்பட்ட முஸ்லிம்கள் கண்டி அரசனின் அனுமதியுடன் 1636ல் கொட்டியாபுரத்திற்கு வந்து குடியேறினர்

(கொட்டியாபுரப்பற்று வரலாறு - எம்.ஏ. சமது பக்.34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே பறங்கியர் மேல் வெறுப்புக் கொண்ட கொட்டியாரப்பற்று மக்கள் அவர்களால் விரட்டப்பட்ட மக்கள் கூட்டம் தவளங்களிலும், கால்நடையாகவும் வந்துகொண்டிருந்த போது வன்னியனார் தலைமையில் அவர்களை வரவேற்று உபசரித்தனர். வன்னியனாரும் அவர்களுக்கு ஆறுதல் கூறி தனது ஆட்சிக்குட்பட்ட கொட்டியாரப்பற்றில் பூரண சுதந்திரமாக நடமாடவும் வன்னிமைக்கு பூரணமாக கட்டுப்பட்டு வர்த்தக நடவடிக்கைகளை நடாத்துவதற்கும் அங்கீகாரம் அளித்தார்.

இவர்கள் பெருமளவில் கொட்டியாரத் துறையை அண்டிய முத்தூரிலும் பெரிய தோப்பிலும் குடியேறினர். வணிக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். இவர்களது வணிகம் பெரும்பாலும் கண்டியை மையப்படுத்தியதாகவே அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாமரை

இளஞ்சிங்கன் இளவரசுப் பட்டமேற்ற பின் பெரும்பாலான காலத்தை சம்பூரிலேயே கழித்தான். இடையிடையே மாமனார் அரசு செய்யும் மேன்காமத்திற்கு சென்று தாய் தந்தையரையும் வன்னியரான மாமனாரையும் சந்தித்து வரும் காலத்தில், வன்னிமையிடமிருந்து வந்த கண்டி செல்வதற்கான அவசர அழைப்பை ஏற்று அடுத்தநாள் காலை மேன்காமம் செல்ல எண்ணங் கொண்டவனாய், தன்னுள்ளங் கொள்ளை கொண்ட தாமரையைப் பார்ப்பதற்காக அவர்கள் வழக்கமாகச் சந்திக்கும் இடத்தை நோக்கி புரவியைச் செலுத்தினான்.

அங்கே தாமரை வில்லுக்கரையோரத்திலுள்ள மதுர மரத்தடியில் தண்ணீரில் கல்லெறிந்தவாறு தனித்தே காணப்பட்டாள். அருகிலிருந்த பூவரசு மரத்தில் குதிரையை கட்டிவிட்டு குதிரையிடம் சத்தமிட வேண்டாம் என்று சொல்லித் தடவியவாறு தாமரையிருக்குமிடம் நோக்கி மொதுவாக காலடியெடுத்து வைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரமாகியும் வராத காதலனில் காதல் கோபங்கொண்ட தாமரை காத்திருந்து களைத்து கொம்புதேடும் கொடிபோல் வளைந்து கிடந்தாள். அந்த நிலைக்குக் காரணமான தன் காதலன் மேல் அளவற்ற பாசமாயிருந்தாள். தன்மீது கோபமாயிருக்கின்றாள் என்று பின்னாலிருந்த படியே உணர்ந்த இளஞ்சிங்கன் மெதுவாக அவள் கண்களிண்டையும் தன்னிரு கைகளினால் மூடிக்கொண்டான். திமிறியெழுந்த தாமரை அதற்கப்பால் அவனிடமிருந்து விடுபடமுடியாமலிருப்பதை உணர்ந்தாள். அந்நிலை தனக்கும் தேவையாயிருப்பதையும் அதே கணத்திலுணர்ந்த பின் வார்த்தைகள் மட்டும் வெளிப்பட்டு முணுமுணுத்தன.

அவற்றைக் கணக்கிலெடுக்காத இளஞ்சிங்கன் கானகத்துக் காரிருளில் கைவிடப்பட்டவனானவன் மூக்கினால் வாசனையையும் கையினால் ஆதாரம் தேடி தடவுவதையும் போல் அவள் கூந்தலினுள் முகம்புதைத்து கூடிவரும் வாசனையில் தன்னையும் மறந்து வார்த்தைகள் அர்த்தமற்று எழுகையில் அவன் கைகளும் மேலும் கீழுமிறங்கி எதையோ தேடியலைந்தது. வெட்கங் கொண்ட தாமரை "என்னது……..?" என்றாள் பொய்க்கோபத்துடன்.

"முல்லைச் சரஞ்சூடிய கார்மேகக் குழலில் கமழும் வாசனை என்னை நிலைதடுமாறச் செய்கிறது அன்பே" என்றான்.

"மீண்டும் ஆரம்பித்து விட்டீர்களா? உங்கள் பழைய பல்லவியை" என்று கூறியவள்

"இதைக் தேடிக் கண்டுபிடித்து வரத்தானா இவ்வளவு நேரம்"என்று செல்லமாய் கடிந்தாள்.

"மன்னித்தருள வேண்டும் என் வருங்கால இராணியே உங்களிடம் பேச முக்கியமான தகவலுடன் வந்தேன்" என்று நிதானம் காட்டினான்.

அவன் முகம் பார்க்க பின் திருப்பியவளின் கன்னங்கள் அவன் கன்னங்களில் உரச வார்த்தைகள் ஓடி ஒளிக்க சிறிது நேரம் ஒருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். சட்டென்று தன்னிலையுணர்ந்த தாமரை வெட்கத்துடன் அவன் மார்பில் சாய்ந்தாள். தன் கோபம் எங்கே போயிற்று என்று நாணமுற்று இதுதான் பெண்களின் நிலை என்று தன் தோழி சொன்னது நினைவிற்கு வந்தது. மீண்டும் இளஞ்சிங்கன்

"தாமரை உன்னோடு பேச வேண்டும் என்று சொன்னேன்" என்றான்.
"அதுதான் பேசுகிறீர்களே" என்றாள் பதிலுக்கு.

"என்ன பேசுகிறேன்" என்றவனுக்கு

"எங்கேயோ போக வேண்டும் என்று பேசுகிறீர்கள்" என்ற தாமரையின் கன்னங்களை தனது இரு கைகளினால் பற்றியவன்
"ஆமாம் என்னுயிரே நான் உடனடியாக கண்டி இராசதானிக்குச் செல்ல வேண்டும்"
என்று அழைப்பு வந்த விடயத்தைக் கூறியதும் அவள் கண்களிரண்டிலிருந்தும் தாரை தாரையாக நீர் வழிந்தோடியது. விம்மி விம்மி சிறுகுழந்தைபோல அழுதவளுக்கு ஆறுதல் கூறி மார்போடு அணைத்து,

"தமிழரும் சிங்களவரும் சேர்ந்து கண்டியரசன் தலைமையில் பறங்கியரை வெளியேற்ற சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கின்றனர். இது விடயமாக கண்டியரசனுடனான சந்திப்புக்கு நான் செல்லப் போகின்றேன். நான் வரும் வரைக்கும் அவதானமாயிரு........."

என்று குழைந்த குரலில் கூறினான். தன் தலைவன் தன்னைப் பிரிந்து வெகுதூரம் செல்வதை நினைத்து பொறுக்காதவளாய்
"சீக்கிரம் திரும்புங்கள்" என்றாள்.

வாரியணைத்து அவளை அள்ளித் தாங்கிய இளஞ்சிங்கன் அவள் காதருகினிலே காதல் வார்த்தைகள் சிலவற்றை இதமாக ஊற்றிவிட்டு, புரவியிலேறித் தட்டியதும் புரவி பாய்ந்து சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமைவெட்டாதவளாய் அவன் போவதைப் பார்த்துக் கொண்டேயிருந்தவள் தன்தோளில் கையொன்று பட்டதையுணர்ந்து சட்டென்று திரும்பினாள். அங்கே அவளுக்காக அவளது தோழி நின்றுகொண்டிருந்தாள். தாமரைக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறியவாறு தோழி அவளை இருப்பிடம் அழைத்துச் சென்றாள்.

அன்றிரவு ஒற்றர்தலைவனையும், படைத்தலைவர்களையும் அழைத்து ஆலோசனை நடத்தினான் இளஞ்சிங்கன். அவர்கள் பறங்கியர் தரைகொண்ட இடங்கள் அவர்களின் நகர்வுகள் அடங்கிய திட்டங்கள் சகலதையும் விவாதித்து விட்டு இடிமணத்துறை, முத்தூர், வேடங்கந்து ஆற்றடி, மத்தளமலை, தோணிக்கல்லடி, கொக்கட்டி, கரடிமலை முதலிய இடங்களில் கண்காணிப்புக்களைப் பலப்படுத்துமாறும், தகவல்களை உடனுக்குடனேயே மேன்காமத்து வன்னிபத்துக்கு தெரியப்படுத்துமாறும், தான் வரும்வரை மைத்துனன் இளந்திரையனை பொறுப்பாக அமர்த்திவிட்டு, வேண்டிய ஆலோசனைகளை அவர்களுக்கு வழங்கி வழியனுப்பிய பின் நித்திரைக்குச் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு சிங்கங்கள்

அதிகாலையில் சூரியோதயத்துக்கு முன்னரே மேன்காமத்தை அடைந்துவிட வேண்டுமென்று எண்ணங்கொண்டவனாய் புறப்படத் தயார் நிலையிலிருந்த நண்பனும் தனது மெய்ப்பாதுகாவலனுமாகிய சத்தியன் மற்றும் தயார்நிலையிலிருந்த பத்து குதிரைவீரர்கள் சகிதம் புறப்பட்டான். புரவிகள் காற்றிலும் கடிதாக விரைந்து மருதடிச்சேனை, இடிமண்துறை, பள்ளிக்குடியிருப்பு, பெரியதோப்பு ஊடாக மேன்காமத்தை அடைந்து சிறிது நேரம் வன்னிமையிடம் உரையாடிவிட்டு விசேட அழைப்பின் பேரில் கண்டி செல்வதற்கான காரணங்களையும் அறிந்து கொண்டு, தாய் தந்தையிடம் ஆசி பெற்று புறப்பட இருந்த இளஞ்சிங்கனிடம்

"செனரத் மன்னனின் நன்மதிப்பைப் பெறவேண்டும்" என்றும், சத்தியனிடம் "இளவரசனின் பாதுகாப்பு கவனம்" என்றும் கூறி இருவரையும் வன்னிமை வழியனுப்பி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள் இருவரும் நண்பகல் உணவையும் எடுத்துக்கொண்டு கங்கைவேலியைக் கடந்து குருக்கள் கங்கையை அடைந்தனர். அப்போது கங்கையின் நீர்மட்டம் குறைவாக காணப்பட்டதால் புரவியைக் கொண்டு இலகுவாக கங்கையைக் கடந்தனர். பின்னர் அங்கு இராஜ உடைகளைக் களைந்து வணிகர் வேடந் தாங்கி காற்றில் புரவிகளிரண்டையும் பறக்கவிட்டனர். அடர்ந்த ஓங்கி உயர்ந்த மரங்களும், திகிலடையச் செய்யும் குவிந்த மரக்கிளைகளுமாகக் காணப்பட்ட வனாந்தரங்களினூடாகச் செல்லும் ஒற்றையடிப் பாதையூடாக ஆங்காங்கே தென்பட்டவர்களிடம் வழியைத் தெரிந்து கொண்டு கண்டி இராசதானிக்குட்பட்ட பிரதேசங்களினூடாகச் சென்று மாத்தளையை அன்றிரவு அடைந்தனர். அன்றைய இரவை அங்கேயே கழிக்கும் திட்டமுடையவர்களாய் சத்திரம் ஒன்றை அணுகினர்.

சத்திரத்தின் கதவு உட்புறமாக பூட்டப்பட்டிருந்தது. சத்திரத்தின் கதவைத் தட்டிய சிறிது நேரத்தின் பின் கதவு திறந்தது. கட்டையான தோற்றங்கொண்ட பருமனான ஒருவர் சிங்கள மொழியில்

“ யார் நீங்கள்? ” என்று வினவினார்.

சிங்கள மொழியின் பரீச்சயம் இளஞ்சிங்கனுக்கு இருந்ததனால் “நாங்கள் வணிகர்கள் கொட்டியாபுரப்பற்றில் இருந்து வணிக விடயம் சம்பந்தமாக கண்டிக்குச் செல்கிறோம். ஆனால் செல்லும் வழியில் இருட்டி விட்டது. அதனால் தங்குமிடம் தேடி இங்கு வந்தோம்”

என்று கூறினான். அவர்களை உள்ளே அனுமதித்த சத்திரக் காவலன் அவர்களிடம்

“நாடு தற்போது இருக்கும் சூழ்நிலை சரியில்லை. யாரையும் நம்பமுடியவில்லை அதனால் அரசியல் பேசுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்” என்று கூறி அவ்விடத்தை விட்டகன்றான்.

இரவுணவைப் பெற்று கொண்டு உண்ணும் போது நண்பனிடம் பேச்சைத் தொடங்கிய இளஞ்சிங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கண்டி இராசதானியிலும் நிலைமை சரியில்லை போல" என்றான். அதற்கொப்பிசையத் தலையால் சைகை காட்டிய சத்தியன்

"இளவரசே இது அரசியல் பேச்சு"
என்று மிகவும் மெதுவாகக் கூறினான்.

இருவர்களாலும் சிரிப்பை அடக்க முடியாது சிரித்துக் கொண்டிருந்தனர்.

பின்னர் சத்திரத்தின் பின்பறமாகச் சென்ற இருவரும் புரவிகளுக்குச் சாப்பாடு, தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்தவனிடம் சிங்களத்தில்

"நன்றாகச் சாப்பிடுகின்றனவா? அவை மிகவும் களைத்து விட்டன" என்று கேட்டபோது

"ஆமாம் வணிகர்களே களைப்பு காரணமாக மிக விரைவாக சாப்பிட்டுவிட்டன" என்று தமிழில் சொன்ன போது ஆச்சரியமடைந்த இருவரும் "உனக்குத் தமிழ் தெரியுமா?" என்றனர்.

அதற்கு அவன்

"இப்போது தமிழ் தெரியாது விட்டால் ஊமை போல இருக்கவேண்டியது தான்" என்று கிண்டலடித்து "இங்கு வரும் வணிகர்கள் பெரும்பாலும் தமிழையே பேசுகின்றனர். அவர்கள் மூலமே கற்றுக் கொண்டேன் என்றான்"

மிகுந்த அடக்கத்துடன்.

சுமார் திடகாத்திரமான இறுகிய உடலமைப்பைக் கொண்டவனும் நீண்ட கைகளையும் குறுகுறுத்த விழிகளையும் கொண்ட குதிரை பராமரிப்பாளனைப் பார்த்து

"இந்த தொழிலை எவ்வளவு காலமாக செய்கின்றாய்?"

என்று கேட்ட இளஞ்சிங்கனுக்கு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஓரிரு வருடங்களாகத் தான்” என்று பதிலளித்தான்.

“உன்னைப் பார்த்தால் போர் வீரன் போல் தோன்றுகிறது ஆனால்.....” என்று சொல்லிக் கொண்டு போன இளஞ்சிங்கனை இடைமறித்து

“நீங்கள் என்னை போர் வீரன் அது இது என்று கூறி வம்பில் மாட்டி விடாதீர்கள்” என்று வினயமாகக் கேட்டுக் கொண்டதோடு

“நீங்கள் கொட்டியாபுரத்திலிருந்தா வருகிறீர்கள்” என்ற கேள்விக்கு

“ஆம் அதெப்படி உனக்குத் தெரியும்?” என்று ஆச்சரியத்துடன் வினவிய இளஞ்சிங்கனைப் பார்த்து

“நீங்கள் கதைத்ததைக் கேட்டேன்” என்றான்.

“உமக்கு பாம்புக் காதுதான் போல” என்று கிண்டலடித்த இளஞ்சிங்கன் உமது பெயர் என்னவென்று வினவியதற்கு,

தனது பெயர் “சிங்கன்” என்றான்.

பின்னர் அவனிடமிருந்து கண்டிக்குச் செல்லும் வழியைக் கேட்டுக் கொண்ட இளஞ்சிங்கன் அவனிடம்

“உன்னை பிரிந்து செல்ல என் மனம் ஏனோ மறுக்கிறது. திரும்பி வரும் போது உன்னை மீண்டும் சந்திக்கின்றேன்” என்றதும்

“நல்லது” என்ற குதிரைக்காவலன்

“கொட்டியாரத் துறையில் வணிகம் சிறப்பாக நடைபெறுகிறதா” என வினவினான்.

சிறிது நேரம் ஆச்சரியத்திலாழ்ந்தான் இளஞ்சிங்கன். சாதாரண குதிரைக் காவலனுக்கு நாட்டு நடப்புகள் யாவும் தெரிகிறதே அத்தோடு இவனைப் பார்த்தால் நிச்சயம் ஒரு குதிரைக் காவலன் போலத் தோன்றவில்லை. எச்சரிக்கையாகப் பேச வேண்டும் என்று மனதில் நினைத்தான்.

“என்ன வணிகரே யோசனை? நான் சாதாரணமாகத் தான் கேட்டேன். சில காலங்களுக்கு முன் கொட்டியாரத்துறைக்கு வணிகரொருவருடன் வந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன அழகான இடம், அன்பான மக்கள், அற்புதமான பிரதேசம், கப்பல்களுக்கு பாதுகாப்பான துறை"
என்று விவரித்த குதிரைக் காவலன்
"அதுமட்டுமல்ல அங்குள்ள இளவரசனைப் பற்றி அங்குள்ளவர்கள் பெருமையாகப் பேசினார்கள். விற்படை, வாட்படை, குதிரையேற்றம், யானையேற்றம் அத்தனையும் இளவயதிலேயே கற்று முடித்து விட்டாராம். பாடல்கள் இயற்றுவதிலும் பாடுவதிலும் வல்லவராம்" என்றும் கூறினார்கள்.
"அது உண்மை தானா?" என வினாவினான்.

சற்றே சுதாகரித்துக் கொண்ட இளஞ்சிங்கன்
"அப்படித்தான் இருக்க வேண்டும்.." என்றும் தானும் அவ்வாறே கேள்விப்பட்டதாகக் கூறி,
"சரி நாழிகையாகிறது நாங்கள் உறங்கிவிட்டு நேரகாலத்தோடு பயணமாக வேண்டும்" என்று கூறிய இளஞ்சிங்கனைப் பார்த்து
"நாம் மீண்டும் சந்திப்போம்"
என்று கூறி அவ்விடத்தை விட்டகன்ற குதிரைக் காவலனுடைய உரையாடல்கள் இளஞ்சிங்கனுக்கு வித்தியாசமானவையாகத் தோன்றின.

அதிகாலையில் தங்களது புரவிகளை அவிழ்த்துக் கொண்டு புறப்பட்ட இருவரும் மலையகத்தின் இயற்கை எழில் கொஞ்சும் அழகையும், தண்மையின் உணர்ச்சிகளையும் உணர்ந்தும் இரசித்தும் கொண்டு சென்றனர்.
"கங்கா தேவியானவள் கடலோடு சங்கமிக்கும் இடத்தில் இருந்து வருகின்ற நாங்கள் அக்கங்கைத் தாயின் பிறப்பிடத்திற்கு வருவதையிட்டு பெருமையாயிருக்கிறது." என்று சத்யன் கூறினான்.
"ஆமாம் சத்யா பச்சைப் பசேலலென காட்சி தரும் மலைகளின் இடையே கங்கை வளைந்து நெளிந்து வனப்புக் காட்டும் அழகை அனுபவிக்க வேண்டும் போலிருக்கிறதே" என்று கூறிய இளவரசனுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தாங்கள் இவ்வாறு இங்கே அனுபவித்துக் கொண்டிருந்தால் அங்கே தாமரையின் நிலை என்ன? " என்று தாமரையை நினைவுபடுத்தினான்.

"இல்லை நண்பா இந்த கங்கையின் தயவினால் அல்லவா நமது கொட்டியாரபுரம் வளம் பெறுகிறது" என்றான்.

நீர் வீழ்ச்சியின் அழகை அள்ளிப் பருகியவாறு, மலைக் கணவாய்களினூடாக இருவரும் குதிரையில் மெதுவாகச் சென்றனர். சூரியன் நடுவுச்சியைத் தாண்டியதைக் கண்டவர்கள் கங்காதேவியின் சிற்றாறொன்றின் அருகாமையில் இறங்கி நீராடி விட்டு சத்திரத்தில் இருந்து கொண்டு வந்த உணவை உண்ணத் தொடங்கினர். அப்போது அவ்வழியில் வந்த இருவர் அச்சிற்றாறைக் கடக்கும் கட்டுமரம் வரும்வரை நாட்டு நடப்புக்களைப் பற்றிப் பேசத் தொடங்கினர்.

அவர்களுள் ஒருவன்
"செங்கடகல ஒரு போதும் இவ்வாறு இருந்ததில்லை. எங்கு பார்த்தாலும் ஆயுதம் தாங்கிய படை வீரர்களாகவே தெரிகிறது. மக்களும் எந்த நேரத்தில் பறங்கியர் இங்கு வருவார்களோ என்று பயந்த வண்ணமே இருக்கின்றனர். நேற்றைய சண்டையிலும் உயிரிழப்புகள் அதிகமாம் என்று பேசிக் கொள்கின்றனர்"
என்றான். மற்றவனும் அதை ஆமோதித்து விட்டு

"எப்படித் தான் அந்த வெள்ளைக்காரர்கள் இங்கு வந்தார்களோ? அவர்களின் முக்கியமான வேலையே கோயில்களை இடிப்பதும், மதத்தைப் பரப்புவதும் தானாம். யாழ்ப்பாணத்து அரசர்களினதும் கோட்டே அரசர்களினதும் ஆட்சியையும் பிடித்து விட்டார்களாம். நாங்கள் ஒற்றுமையில்லா விட்டால் எங்கள் நாடும் இப்படித்தான் அடிமைப்படும்" என்றான்.

"நமது அரசனின் இளவரசுக்கள் அதை நடக்க விடமாட்டார்கள்" என்று பெருமையுடன் பேசியவன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சில நாட்களுக்கு முன் நடந்த சண்டையில் இளவரசர்கள் மூவரும் காட்டிய வீரத்தைப் பற்றி நாடே பேசுவதை நாம் கேட்கிறோம்" அல்லவா என்றான்.

இவ்வாறான சம்பாசனைகளிடையே அவர்கள் சென்றுவிட்ட பின்னர் இளஞ்சிங்கனும் சத்யனும் புறப்படத் தயாரான போது திடீரென பத்துப் பேர் கொண்ட புரவி வீரர்களால் சுற்றி வளைக்கப்பட்டனர். இதனால் அதிர்ச்சிடையந்த இருவரும் அப்படியே நின்று கொண்டிருந்தனர். அவர்களுள் தலைவன் போல் தென்பட்ட ஒருவன் முன்னே வந்து

"கொட்டியாரத்து வணிக வேடதாரிகளே உங்களை கைது செய்யச் சொல்லி மகாராஜா ஆணை"

என்று தமிழில் கூறினான். வேறோரு சந்தர்ப்பமானால் கண்ணிமைக்கும் நேரத்துக்குள் அனைவரையும் வீழ்த்தும் திறன் கொண்ட இளஞ்சிங்கன் அன்று கண்டியரசின் நன்மதிப்பை பெறவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக போரிலீடுபடவில்லை. அவன் மனம் தங்களை அடையாளம் கண்டு கொள்ளுமளவுக்கு கண்டியரசனின் ஒற்றர் படையை எண்ணி வியந்ததே தவிர சற்றும் கூட முகத்தில் பயத்தைக் காட்டவில்லை. இதனால் அவனது மனவுறுதியைப் பார்த்து அதிசயித்த கண்டிய படைத்தலைவன் இவன் எதற்கும் அஞ்சான் என்று தன்னுள்ளே கூறியவாறு

" போகலாமா வணிகர்களே " என்றான்.

" எங்கே.......? " என்ற சத்தியனின் கேள்விக்கு

" விருந்துக்கு" என்று அநாயாசமாகப் பதிலளித்தான்.

பின்னர்

"குழப்பமேற்படுத்தாமல் எங்களுடன் வாருங்கள்"

என்று கூறி அரண்மனையை நோக்கி அழைத்துச் சென்றான்.

என்ன நடக்கிறது பார்ப்போம் என்றெண்ணியவாறு அவர்களும் தாங்கள் யாரென்று அடையாளப்படுத்தாமல் கூடவே சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசசிங்கனின் நட்பு

கைதிகளாக அழைத்துச் செல்லப்பட்ட இருவரும் அரண்மனைக்குள் நுழைந்ததும் அங்கே அவர்கள் கண்ட காட்சியை அவர்களாலேயே நம்பமுடியவில்லை. பிரமித்துப் போனார்கள்.

அங்கே அரசர்களுக்குரிய ஆடைகளையும் அணிகலன்களையும் அணிந்த சற்று வயதான ஒருவர் வந்து,

"கொட்டியாரபுரப்பற்று இளவரசரும் அவர் நண்பரும் இந்தக் கண்டி இராச்சியத்தினால் வரவேற்கப்படுகின்றனர்"

என்ற வார்த்தைகளைக் கேட்ட இருவரும் அதிர்ச்சி யடைந்தனர். அமைதியாக இருந்தவர்களை செனரத் மன்னர் உள்ளே வருமாறு கூறி அழைத்துச் சென்றார்.

பின்னர் கொட்டியாரபுரத்து வன்னிபமான தனது அன்புக்குரிய நண்பனைப் பற்றியும் அங்கேயுள்ள நிலவரங்களைப் பற்றியும் கேட்டறிந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளஞ்சிங்கனும் வன்னியனார் கண்டி மன்னனுக்குக் கொடுத்தனுப்பிய அன்புப் பொருட்களைக் கொடுத்தான்.

பின்னர் தானடக்கி வைத்திருந்த சந்தேகத்தைக் கேட்டான்.

" மகாராஜா தங்களுக்கு எங்களைப் பற்றிய தகவல் கிடைத்தது எவ்வாறு? "

"சிங்கன்" என்று பதில் மன்னனிடமிருந்து வந்தது.

"குதிரைக் காவலன் சிங்கனா....?" என்று கேட்டான் இளஞ்சிங்கன்.

"ஆமாம், அவன் என் இரண்டாவது வாரிசு" என்று பதிலளித்தார்.

பின்னர் " நீங்கள் களைப்பாகவுள்ளீர்கள். ஓய்வெடுத்தபின் நாளை காலை அரசவையில் சந்திக்கலாம்" என்று கூறி விருந்தினர் மாளிகையில் தங்குவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு காவலர்களுக்குப் பணித்து விட்டு அங்கிருந்து நகர்ந்தார்.

களைப்பு மிகுதியினால் விரைவாகவே உறங்கிய நண்பர்களிருவரும் சூரியோதயத்தின் பின்னர் காவலர்கள் வந்து எழுப்பிய பின்னரே எழுந்து நீராடிவிட்டு அரசவைக்குச் சென்றனர்.

வழமைபோல அன்றும் அரசவை நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்தன. அன்றைய தினம் முழுவதுமான உரையாடல்கள் பறங்கியர் பற்றியதாகவே அமைந்திருந்தது. அடிக்கடி கண்டி இராச்சியம் மீது படையெடுத்து அழிவை ஏற்படுத்தும் அவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றுவது பற்றியே கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. கண்டி இராச்சியத்திற்கு உட்பட்ட சிற்றரசர்கள் பலரும் அங்கு பிரசன்னமாயிருந்தனர்.

அது ஒரு போர்கால பாசறை போன்றே இளஞ்சிங்கனுக்குத் தென்பட்டது. ஆடல் பாடல் கொண்டாட்டங்களோ, ஏனைய அரச சம்பந்தமான நிகழ்வுகளோ அல்லாமல் அனைவரும் ஓர் உணர்ச்சி வசப்பட்ட நிலையிலேயே காணப்பட்டனர். நாட்டு மக்களனைவரையும் எச்சரிக்கையாயிருக்கும் படி அறிவுறுத்தப்பட்டதோடு அரசவை கலைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய நண்பகல் விருந்தில் அரண்மனையில் அரசன் மற்றும் அவருடைய புதல்வர்களுடன் இளஞ்சிங்கன் கலந்து கொண்டிருந்தான்.

கொட்டியாபுரப்பற்று இராச்சியத்தின் மீது இயல்பாகவே கண்டியரசனுக்கு அக்கறை இருந்து கொண்டே வந்தது. அதனாலென்னவோ கொட்டியாபுர வன்னிபங்களை அவன் என்றுமே மதிக்கத் தவறுவதில்லை. முன்னர் கூட அரசப் பிரதானிகள் கொடுத்த அழுத்தத்தினாலே தான் இப்பிரதேச வன்னிபத்துக்கும் பழுகாமத்து வன்னிபத்துக்கும் அரச கட்டளையை அனுப்பியதாக பின்னொரு சந்தர்ப்பத்தில் மன்னர் தெரிவித்ததுமுண்டு. இந்த அக்கறைக்கு கொட்டியாரத்துறை, இலங்கைத்துறை போன்ற முக்கிய வணிகப் போக்குவரத்துக்கான துறைகளும், வங்களா விரிகுடாக் கடலில் கொட்டியாரக் குடாவுக்கான முக்கியத்துவமும் காரணங்களாக அமைந்திருந்தன. கண்டி இராச்சியத்தின் வெளித் தொடர்புகளுக்காக கொட்டியாரபுரப் பிரதேசம் பெரும் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

இவைகளெல்லாம் இளஞ்சிங்கனுக்கும் தெளிவாகத் தெரிந்திருந்தது. அவனது நாடும் கூட பறங்கியரை வெளியேற்றுவதற்கான முயற்சிகளில் கண்டி இராச்சியத்தின் செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கிக்கொண்டேயிருந்தது.

பின்னர் இளஞ்சிங்கனும் குதிரை காவலன் வேடமிட்ட இராசசிங்கனும் தனியாகப் பல விடயங்களை அளவளாவிய வண்ணமிருந்தனர். இராசசிங்கனின் தமிழ்ப் பற்றும், புலமையும், சைவசமயப் பற்றும் இளஞ்சிங்கனை வெகுவாகவே கவர்ந்தது.

இவ்வாறிருக்கும் போது ஒற்றன் ஒருவன் முக்கிய செய்தியொன்றுடன் காத்துக் கொண்டிருப்பதாக மன்னனிடம் தெரிவிக்கப்பட்டது. அவனை உள்ளேவிட ஆணையிட்ட அரசன் அவனிடம் செய்தியைக் கேட்டபின் அவனை அனுப்பிவிட்டு அலோசனையில் ஆழ்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன் தனது புதல்வர்கள் மூவர், சேனாதிபதி, முதல்மந்திரி ஆகியோரை அழைத்து பறங்கியர் கண்டியை நோக்கி மீண்டும் பெரும்படையுடன் வந்து கொண்டிருக்கும் செய்தியைக் கூறியதும் அங்கே மந்திராலோசனை நடந்தது. அடிக்கடி படையெடுத்துக் கொண்டிருக்கும் பறங்கியரை இயலுமானவரை முற்றாக நிர்மூலம் செய்வது என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு செனரத் மன்னர் தான் வகுத்த வியூகங்களை அவர்களுக்குக் கூறலானார்.

"நமது படைகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றுக்கும் இளவரசர்கள் மூவரும் தலைமை தாங்குவார்கள் எனவும் கூறினான். அத்தோடு தான் குமாரசிங்கன் பிரிவிலும், சேனாதிபதி இராசசிங்கன் பிரிவிலும், மந்திரி விஜயபாலவின் தலைமையிலும் போரில் பங்கு கொள்வது என தெரிவித்தார்."

இதன்போது இடையே குறுக்கிட்ட இளஞ்சிங்கன் இந்தப் போரில் தனது பங்களிப்பும் இருக்க வேண்டும் என தான் விரும்புவதாகவும், தன்னையும் ஓர் படையணியில் இணைத்துக் கொள்ளுமாறும் கூறினான். இளஞ்சிங்கனின் வற்புறுத்தல் காரணமாக அவனது கருத்தை முதலில் மறுதலித்த மன்னன், "நீர் எமது விருந்தினன்" என்று கூறியதோடு

"விரும்பினால் உமது நண்பன் இராசசிங்கனுக்கு உதவியாக செயற்படலாம்" என்றும் கூறினார்.

வீட்டுக்கொரு வீரர்களை அணிதிரளுமாறு ஆணையிட்ட மன்னர் நாளை மறுநாள் காலை படை புறப்படுவதற்கு ஆயத்தமாகுமாறு கட்டளையிட்டு நகர்ந்தார். அன்று நள்ளிரவே நாட்டு மக்கள் அனைவருக்கும் தகவல் பறைசாற்றப்பட்டது. செங்கடகல நகரமே அன்று அல்லோலகல்லோலப்பட்டது. இருப்பினும் அனைவரும் செனரத் மன்னனின் புதல்வர்களின் வீரத்தின் மேல் நம்பிக்கை வைத்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு மீண்டும் தலைவர்களுக்கிடையில் இரகசிய ஆலோசனை நிகழ்ந்தது. இதன்போது பறங்கியர் படைத்தளபதி கொன்ஸ்ரான்ஸ்ரைன் டீ சா தலைமையிலான படைவீரர்களில் 5000 லஸ்கரின்களுடன் 450 போர்த்துக்கீச வீரர்கள் அடங்கியிருப்பதாகவும் இவர்கள் தவிர பொதி சுமப்பவர்கள், கூலியாட்கள் என ஆயிரம் பேரும் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்படையினர் மலையகத்தை நோக்கி வருகின்ற போது எதிர்ப்பட்ட கிராமங்களை எல்லாம் சூறையாடியும், கோவில்களை உடைத்தும் கொடுமைகள் செய்வது கண்டி நகரெங்கும் பரவியது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திய செனரத் மன்னன் நாட்டு மக்களுக்கு மிக முக்கியமான செய்தியொன்றை முரசறைவித்திருந்தான். அதாவது அந்நியரான பறங்கியர் கண்டி நகரைக் கைப்பற்றும் நிலை ஏற்பட்டால் கண்டி மக்கள் யாவரும் கைதிகளாகி சித்திரவதைக்குள்ளாக நேரிடும் என்று தெரிவித்திருந்தான். இதனால் கண்டி மக்களில் பெரும்பாலானோர் விசுவாசத்தோடு கண்டியரசுப் படைகளில் இணையத் தொடங்கினர். இது மன்னனுக்கு பெரும் வாய்ப்பாக அமைந்தது.

இவ்வாறாக கண்டியரசுப் படைகளில் ஏறத்தாழ 40,000 பேர் இருந்தனர்.[(4)] இவர்கள் விற்படை, ஈட்டிப்படை, புரவிப்படை, வாட்படை, சுடுகலன் படை என்பவற்றில் உள்ளடக்கப்பட்டனர். புரவியேற்றத்தில் வல்லவனான இளஞ்சிங்கன் புரவியில் செல்லும் போதே குறிதவறாது ஈட்டியெறியும் திறனையும், புரவி மீதிருந்தவாறான வாட்பயிற்சியும் இராசசிங்கனின் முக்கிய பிரிவான புரவிப்படைக்கு அவனைத் தலைவனாக்கியது.

4. கி.பி 1630ல் கொன்ஸ்ரான்ஸ்டைன் தலைமையில் 5000 லஸ்கரின்களுடன் 450 போர்த்துக்கீச வீரர்கள் ஏறத்தாழ 40,000 கண்டிப் படைவீரர்களுடன் சண்டையில் ஈடுபட்டனர்.
(இலங்கைவரலாறு - பாகம் II பேராசிரியர். செ. கிருஷ்ணராஜா. பக். 131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நூறு பேர்களைக் கொண்ட இப்படையை ஒரு நாள் அவகாசத்துக்குள் சீரமைத்தான் இளஞ்சிங்கன். இதற்கு அவனது சிங்கள மொழிப் பயிற்சி பெருமளவில் உதவியது. இளஞ்சிங்கனது வீரத்தைக் கண்ட மன்னனும், இராசசிங்கனும் அவனது வீரத்தைப் பாராட்டினர்.

அதுமட்டுமல்லாது கண்டி அரசன் இளஞ்சிங்கனிடம் ''உமது வீரத்தால் இப் பறங்கியருக்கெதிரான போரில் ஒரு முக்கிய திருப்புமுனை ஏற்பட இடமுண்டு'' என வாழ்த்தினார்.

இளஞ்சிங்கனும் பதிலுக்கு

''கொட்டியாபுரப்பற்று சார்பாக எனக்கு இச் சந்தர்ப்பத்தை வழங்கிய தங்களுக்கு மிக்க நன்றி. அத்தோடு பறங்கியருக்கெதிராக மேற்கொள்ளப்படும் இப்படியொரு சந்தர்ப்பத்தையே நான் இவ்வளவு நாளும் எதிர்பார்த்துக் காத்திருந்தேன்''

என்று உணர்ச்சிபூர்வமாகக் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டிப் படையெடுப்பு

பெரும்படையுடன் வந்து கொண்டிருந்த டீ சா சிறந்த ஒரு போர்த்தலைவன் என்றும் அவனுடைய போர்த்தந்திரங்கள் தென்னிந்திய கோவா, கொச்சின் மற்றும் சோழமண்டலம் முழுவதும் பிரசித்தி பெற்றவை என்றும் மன்னர் செனரத் தான் கேள்விப்பட்டிருந்தவை பற்றி நினைத்துப் பார்த்தார்.

இப்போரானது கண்டி இராச்சியத்தின் தலைவிதியையே மாற்றக்கூடியதாக இருக்கப் போகின்றது என்றெண்ணியவாறு சிந்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது இளவரசர்கள் மூவரும் தந்தையின் முன் வந்து வணங்கி நின்றனர். தந்தையின் நிலையைக் கண்டதும் இராசசிங்கன்

“தந்தையே கவலை வேண்டாம் நாங்கள் பறங்கியரை ஓடோட விரட்டியடிப்போம். அவர்களுக்கு அடிமையாகி வாழும் வாழ்வு எமக்குத் தேவையில்லை. நிச்சயம் நாம் அவர்களை வெல்வோம். நண்பன் இளஞ்சிங்கனின் வீரமும் நமக்கு உதவியாக இருக்கும் என்று கூறினான்.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான உரையாடலைத் தொடர்ந்து நால்வரும் போருக்கான உடையணிந்து தங்கள் குல தெய்வத்தை வழிபட்டு விட்டு யுத்த சைன்யங்கள் இருக்குமிடம் நோக்கி நடந்தனர். இவர்களைக் கண்டதும் வாழ்த்தொலிகளும் பேரிகைகளும் முழங்கின. இவைகளின் சத்தம் வானைப் பிளக்கும் வண்ணமாயிருந்தது.

"செனரத் மகாராஜா, பறங்கியரைப் புறமுதுகோட்டிய வீரர், கண்டி இராசதானியின் தன்னிகரில்லாத் தலைவர் தன் புதல்வர்களுடன் வருகின்றார் "
என்று முரசறைவிப்போன் தெரிவித்தான்.

வாழ்த்தொலிகளைச் சைகைகளால் அடக்கிய மன்னன் முப்பெரும் பிரிவுகளாயிருந்த படைவீரர்களின் அணி வகுப்பைப் பார்வையிட்டு திருப்தியடைந்தார். கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரந்து நின்ற சேனைகளையும் அவர்களின் முகங்களில் தென்பட்ட யுத்த வேட்கையும் மன்னனுக்கு வெற்றியை உறுதிப்படுத்தின.

ஏற்கனவே தீட்டியிருந்த திட்டங்களின் படி, பட்டத்து இளவரசன் குமாரசிங்கன் தலையிலான படையணிகள் டீ சாவை பெலிகல் ஓயாவுக்கு அண்மையில் சந்திப்பதென்று முடிவாகியது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு கோட்டையை கைப்பற்றும் முயற்சியில் தானடைந்த தோல்விக்கு[5] பழி வாங்குவதற்காக குமாரசிங்கன் துடித்துக் கொண்டிருந்தான்.

குமாரசிங்கன் தனது படைகளை பெலிகல் ஓயாவை நோக்கி வழிநடத்தினான். படைவீரர்களும் புதிய உத்வேகத்துடன் அணிவகுத்துச் சென்றனர்.

5. இளவரசன் குமாரசிங்கன் கி.பி. 1628ல் போர்த்துக்கேயர் வசமிருந்த மட்டக்களப்புக் கோட்டையைக் கைப்பறும் சண்டையில் தோல்வியடைந்திருந்தான்.
(இலங்கைவரலாறு - பாகம் ii பேராசிரியர். செ. கிருஷ்ணராஜா. பக். 130)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மலைக் கணவாய்களினூடாக புதியதொரு நதிப்பிரவாகம் போல அணிவகுத்து மலையகக் காட்சிக்கு மெருகூட்டினர். ஆனால் இதை இரசித்து அனுபவிக்கக் கூடிய மனநிலையில் அங்கு யாருமேயில்லை என்பதுதான் உண்மை. கண்டியப் படைகள் பறங்கிப் படையை எதிர்க்குமிடத்தை இரண்டு நாட்களுக்கு முன்னரே அடைந்து நிலையெடுத்துக் கொண்டன. செனரத் மன்னனும், குமாரசிங்கனும் தங்கள் படைகளுக்குத் தேவையான உணவுகள் முதலான வசதிகளை கவனித்துச் செயற்படலாயினர்.

விஜயபாலாவை மாத்தளைக்கு அனுப்பி அங்கு நிலை கொள்ளுமாறும் தேவைப்பட்டால் அழைத்துக் கொள்வதாகவும் கூறப்பட்டது. அவனும் கிழக்கு மாகாணத்தினூடாக வரும் பறங்கிப் படையை எதிர்நோக்கியவாறு படையை வழிநடத்தினான்.

கண்டியிலிருந்து புறப்பட முன்னரே ஏறத்தாழ நூற்றைம்பது பேரைக் கொண்ட உப படையணியை விஜயகோன் பண்டார என்னும் தன் உறவினன் தலைமையில், மெனிக்கடவர விலிருந்து வருகின்ற டீ சா தலைமையிலான படைகளை, பதுளைக்கு வரும் வழியில் மறைந்திருந்து சிறு சிறு இழப்புக்களை ஏற்படுத்திப் பின்வாங்கும் திட்டமொன்றையும் மன்னர் வகுத்திருந்தார்.

இவ்வாறு சிறுகச்சிறுக சேதங்களை விளைவிப்பதன் மூலம் பறங்கிப்படைகளின் மனோதிடத்தைக் குறைக்கலாம் என்றும், தற்போதய மலைநாட்டு சீதோஸ்ண நிலை பறங்கியருக்கு ஒத்து வராமல் இருக்கக் கூடுமாதலால் அவர்களின் படை நகர்த்தல் பெரும்பாலும் தாமதப்படலாம் என்றும் திட்டம் தீட்டினார். இத்திட்டம் ஓரளவு கண்டியரனுக்குக் கைகொடுத்தது என்றே கூறலாம்.

மெதுவான படைநடவடிக்கையை மேற்கொண்டு வந்த பறங்கிப் படைகளுக்கு சுதேசியப் படைகள் மறைந்திருந்து வில் அம்புகளால் தாக்குவதும், மலைக்கணவாய்களினூடாக பாரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்களை உருட்டி சேதமேற்படுத்துவதும் பெருமரங்களை வெட்டி வழியில் பீரங்கிகளுக்குத் தடைகளையேற்படுத்துவதுமாக பல்வேறு சிரமங்களைக் கொடுத்தனர்.

இவற்றையெல்லாம் எதிர்கொண்டு பதினெட்டு நாட்களில் டீ சா பதுளையை அடைந்தான். அவனுடைய படைகளும் வருகின்ற வழியில் கிராமங்களிற்கு தீமூட்டியும், அவற்றைச் சூறையாடியும், பெண்கள், முதியவர்களை கொலை செய்வித்தும், கோவில்கள், விகாரைகளைச் சேதப்படுத்தியவாறும் பல வகையான தீங்குகளை இழைத்துக் கொண்டே வந்தனர். இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட கொடும் பாதகச் செயல்களில் பெரும் சிறப்புடன் மைய நகரமாகக் காணப்பட்ட பதுளை நகரும், கதிர்காமக் கோயிலும் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன. தளபதி டீ சா தனது தலைமைக் காரியாலயமாக முதியங்கண விகாரையில் பாசறையமைத்து தனது உபதளபதிகளுடன் இனிமேல் மேற்கொள்ள வேண்டிய திட்டங்களைத் தீட்டினான்.

ஏறத்தாழ ஆளனி வளத்தில் குறைவான பறங்கிப் படையை அவதானித்த செனரத் மன்னன், மாத்தளைப் படையணியை உதவிக்கு வருமாறு அழைப்பை அனுப்பி விட்டு மறுநாள் காலையில் பெலிகல் ஓயாவை கடக்க முற்படும் பறங்கிப் படையணியுடன் போரிடலானான். முதல் நாள் போரில் சுதேசிப் படைகளின் கரந்தடிப் போர் முறைக்கு பறங்கியர் தரப்பில் அதிகளவிலான இழப்புகள் ஏற்பட்ட போதும் அவர்கள் மூங்கில் தடிகளை அணைத்து மாவலி ஆற்றைக் கடப்பதிலேயே குறியாகவிருந்து அதில் வெற்றியும் கொண்டனர்.

அன்றிரவு வந்து சேர்ந்த மாத்தளைப் படையணியால் கண்டியப் படைகளின் மத்தியில் புது உற்சாகம் காணப்பட்டது. அன்றிரவு நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் டீ சாவின் படைபலம் பற்றி ஆராயப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இயலுமானவரை அவர்களுடன் மலைப்பகுதியில் வைத்து சண்டை செய்வதே நன்மை பயக்கும்"
என மந்திரி தெரிவித்ததை ஆமோதித்த அரசன்
"அவ்வாறாயின் மேலும் பல மைல்கள் பின்னோக்கிச் செல்ல வேண்டும்" என்றும் கூறினான்.

முடிவாக நான்கு கோறளையிலுள்ள படைத்தலைவனுக்கு இரகசியச் செய்தியனுப்பி கொழும்பைச் சூழவுள்ள பிரதேசங்களில் உள்நாட்டு கலகங்களை ஏற்படுத்துவது என்றும், இராஜசிங்கனை படையணிகளுடன் கொழும்பு செல்லும் பாதையில் உள்ள ரன்டெனிவலவுக்கு வருமாறும் செய்தியனுப்புவது என்றும் தீர்மானிக்கப்பட்டு அதன் படி ஒற்றர்கள் மூலம் தகவல் அனுப்பப்பட்டது.

இவ்வாறு இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக பலத்த சண்டை இடம்பெற்றது. இரு புறத்திலும் பேரழிவுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. முதலிரு நாள் சண்டையில் ஆதிக்கமேற்படுத்தியிருந்த பறங்கிப் படைகள் மூன்றாம் நாளில் சரிவை சந்திக்கத் தொடங்கினர். பின்வாங்கிச் சென்ற டீ சாவின் படைகள் கொழும்பிலிருந்து வந்திருந்த பீரங்கிகள் கொண்ட பறங்கிப் படைவீரர்களின் வரவால் புது உற்சாகம் பெற்று கடும் சண்டையிலீடுபட தயாராகின.

ரன்டெனிவலவில் தங்கியிருந்து தாக்குதலை மேற்கொள்ள தயாராகியிருந்த வேளை இழப்புகளுடன் சண்டையிட்டு வந்த கண்டியப்படைகள் அங்கே இடையில் முகாமிட்டிருந்த இராஜசிங்கன் தலைமையிலான படைகளுடன் இணைந்து கொண்டன. கூறப்போனால் அன்றைய தினம் இரு தரப்புமே உற்சாகமடைந்திருந்தன. தங்கள் தரப்புக்குத் தான் வெற்றி என் கண்டிப் படைகள் எக்காளமிட்டுக் கொண்டிருந்ததற்கு மகாவீரன் என்று கண்டி மக்களால் புகழப்படும் இராசசிங்கனுடைய வரவும். புரவிப்படை வீரன் என்று கண்டிய வீரர்களால் இனங்காணப்பட்டிருந்த இளஞ்சிங்கனுடைய வரவுமே காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் காலை சண்டை தொடங்கியது ஆரம்பத்தில் இரு தரப்புமே மிக வீரமாக சண்டையிட்டுக் கொண்டிருந்தன. கண்டிப்படைகளின் அம்புகள் பட்டு பறங்கியர் பலர் உயிரிழந்து கொண்டிருந்தனர்.

மறுபுறத்தில் சுடுகலன்களாலும், பீரங்கிகளாலும் பறங்கியரும் தமது பங்கிற்கு இழப்புகளை ஏற்படுத்திக் கொண்டே யிருந்தனர். இதை அவதானித்த இளஞ்சிங்கன் இராசசிங்கனிடம் தான் பீரங்கிப் படையினருடன் சண்டை செய்ய அனுமதி கேட்டான். அதற்கு மறுத்த இராசசிங்கன்

“நண்பா நீர் எங்கள் விருந்தினர். எங்கள் பாதுகாப்பில் போர் புரிவதையே நான் விரும்புகின்றேன்” என்றான். அதற்குப் பதிலளித்த இளஞ்சிங்கன்

“இங்கு தமிழ், சிங்களம் என்றோ கண்டி, கொட்டியாரப்பற்று என்றோ பார்ப்பதற்கில்லை பறங்கியர் இந்நாட்டவரான எங்களுக்குப் பொதுவான எதிரி. அதை விட இந்த டீ சா பொல்லாதவன் இரக்கமில்லாதவன். இவன் தான் எங்கள் கோணேஸ்வரர் ஆலயத்தை இடித்து நிர்மூலம் செய்தவன்”

என்று வாதிட்டு போர் புரிவதற்கான அனுமதியை பெற்று மகிழ்ச்சியுடன் தனது காற்று வேகப் புரவிப் படையினருடன் உறையிலெடுத்த வாளும் கையுமாக பறங்கியரின் சுடுகலன்களுக்கு அகப்படாதவாறு மிக லாவகமாக புரவியைச் செலுத்தி பீரங்கிகளுக்கு மருந்துகள் போட்டுக் கொண்டிருந்தவர்களை நெருங்கினான்.

சிறுவயதிலிருந்தே வாட்போரில் வல்லவனான இளஞ்சிங்கனுக்கு தன்னை உலகம் சிறந்தவொரு போர் வீரனாக ஏற்றுக்கொள்ள இது ஒரு சந்தர்ப்பம் என்று கருதினான். இயலுமானவரை முழு மூச்சுடன் பீரங்கிகளை இயக்கிக் கொண்டிருந்தவர்களை வாளால் வெட்டிச் சாய்த்தான். தலைவனுக்கொப்பாகவே புரவிப்படையினரும் செயற்பட்டு பறங்கியருக்கு அதிகளவு சேதமேற்படுத்தினர். அன்றைய சண்டையில் இளஞ்சிங்கனே கதாநாயகனாகப் போற்றப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு செனரத் மன்னர் தனது கூடாரத்திற்கு இளஞ்சிங்கனை அழைத்து அவனது வீரத்தை வியந்து பாராட்டினார்.

"உலகம் போற்றக் கூடிய உன்னைப் போன்ற வீரர்களிருந்தும் நமது நாடு இவ்வாறு அடிமையாகிக் கிடக்கின்றதே" என்று கூறி தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். பின் கண்டி இராச்சியம் கொட்டியாரப்பற்றுக்கு என்றுமே துணையாக இருக்கும் என்றும் வாக்குறுதி அளித்ததுடன் அடுத்த நாள் போர் பற்றியும் ஆலோசனைகள் செய்தபின் கூட்டம் கலைந்தது.

பறங்கியர் பாசறையிலும் கூட அன்றிரவு இளஞ்சிங்கனைப் பற்றிய பேச்சாகவே இருந்தது. டீ சா அவனது வீரத்தைப் புகழ்ந்து பேசினான். தமிழன் ஒருவன் கண்டியருடன் சேர்ந்து வீரப்போர் புரிந்து தமது வெற்றியின் திசையையே மாற்றியது பற்றி தன் உள்ளக்குமுறலை வெளியிட்டான். எனினும் அடுத்த நாள் போருக்கான ஆயத்தங்கள் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. கொழும்பின் சுற்றுப்புறங்களில் கண்டிய சேனைப் பிரிவொன்று வெளிப்பட்டு குழப்பம் விளைவிக்கின்றமை பற்றிய செய்தி டீ சாவை கவலையடையச் செய்தது. படைகள் குறைந்த நேரத்தில் கொழும்பு கைப்பற்றப்படக்கூடும் என்ற தகவல் அவன் மனதை குழப்பத்தில் ஆழ்த்தியது.

படைத்தளபதிகள் பலரும்

"இப்போது பின்வாங்கி கொழும்பைப் பாதுகாப்போம். பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் மீண்டும் கண்டியைக் கைப்பற்ற போர் தொடுப்போம்"என்றனர். ஆனால் அவன் ஆத்திரத்தினால் நிதானமிழந்தான்.

"என்ன விலை கொடுத்தாவது கண்டியைக் கைப்பற்றுவேன்" என்று உரக்கக் கத்தினான்.

போர்த்துக்கீசப் படைகள் களைப்புற்றிருப்பதையும் இனம் புரியாத நோயொன்றினால் பாதிக்கப்பட்டு வருவதையும், பறங்கிப் படைகளிலுள்ள சுதேசிகள் மத்தியிலான குழப்பங்களையெல்லாம் எடுத்துக் கூறியும் டீ சா அவற்றையெல்லாம் கவனிக்காதது போல் போர் நாளையும் தொடரும் என்று கூறி தளபதிகளை வெளியே செல்லுமாறு பணித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்ஸ்ரான்ஸ்டைன் டீ சா

மறு நாள் காலை போருக்குத் தயாரான வேளையில் வானிலை மாற்றம் பெறத் தொடங்கியது. சில நாழிகைகளுக்கு தொடர்ச்சியாக மழை பெய்து கொண்டேயிருந்தது. கருமேகக் கும்மிருட்டு பார்ப்போரை அச்சமூட்டுவதாயிருந்தது. பறங்கியரின் பீரங்கிகளும், வெடி மருந்துப் பொருட்களும் மழையில் நனைந்தன. இதனால் பீரங்கிகள் ஒழுங்காக செயற்பட மறுத்தன.

மருந்துப் பொருட்களும் மழையில் கரையத் தொடங்கியது. இவற்றைப் பாதுகாக்கவே பறங்கியருக்கு அதிக நேரம் தேவைப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய கண்டிப் படைகள் வலிந்த தாக்குதலைத் தொடங்கின. இளஞ்சிங்கன் இன்றும் சிங்கம் நரிக்கூட்டத்தை வேட்டையாடுவதைப் போல தனது அரபு ஜாதி வெள்ளைக் குதிரையின் மீதேறி பறங்கியருக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சந்தர்ப்பத்தில் எதிர்பாராத விதமான சம்பவம் ஒன்றும் நிகழ்ந்தது. பறங்கியர் பக்கமிருந்து போரிட்ட பெரும்பாலான சுதேசிகளைக் கொண்ட படையானது கண்டியப் படைகளுடன் இணைந்து கொண்டு தாமும் பறங்கியரைத் தாக்கத் தொடங்கினர்.

மறுபுறத்தே போரிட்டுக் கொண்டிருந்த இராசசிங்கனும் டீ சாவும் ஒருவரையொருவர் சளைக்காமல் போரிட்டனர். இருவரும் தத்தமது புரவி மீதமர்ந்து வாட்போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது டீ சாவின் குதிரையானது சகதிக்குள் விட்ட காலை மீண்டும் எடுக்கமுடியாது சரிந்த வேளை எங்கிருந்தோ புறப்பட்ட சுடுகலன் குண்டு ஒன்று டீ சாவின் உயிரை காவு கொண்டது. போர்த்துக்கீசரின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பது போல் கொன்ஸ்ரான்ஸ்டைன் டீசாவின் உடல் கண்டி இராச்சிய மண்ணில் வீழ்ந்தது.

டீ சாவுக்கு அன்று துரதிஷ்டம் என்றே கூறவேண்டும். இயற்கையும் தனது ஆதரவை வழங்கவில்லை. அவனது பறங்கிப்படைகளும் அன்று முழுமனதுடன் போரிடவில்லை. சுதேசிப் படைகளும் திடீரென தமது ஆதரவை கண்டி மன்னனுக்குத் தெரிவித்து அவர்கள் பக்கம் சாய்ந்தனர். அத்துடன் டீ சாவின் நிதானமின்மை போன்ற காரணிகளால் அன்றைய போரில் பறங்கிப் படைகள் தோல்வி கண்டன.

டீ சா கொல்லப்பட்ட செய்தி[6] தீயைப் போல போர்க்களமெங்கும் பரவியது. கண்டியப் படைகளின் உற்சாகம் அளவு கடந்தது. அவர்கள் மகிழ்ச்சி மேலீட்டினால் ஆரவாரம் செய்து கொண்டு பறங்கிப் படைகளை மூர்க்கமாகத் தாக்கத் தொடங்கினர். தமது தளபதி கொல்லப்பட்ட செய்தியைக் கேட்ட பறங்கியர் போர் புரிந்தவாறு பின்வாங்கினர்.

6. கண்டியை கைப்பற்றும் போரின்போது கண்டிய படைவீரர்களால் கொன்ஸ்ரான்ஸ்டைன் டீ சா கொலை செய்யப்பட்டான்.
(இலங்கைவரலாறு - பாகம் ii பேராசிரியர். செ. கிருஷ்ணராஜா. பக். 133)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறங்கிப் படைகள் கொழும்பை நோக்கி பின் வாங்குவதை உணர்ந்த செனரத் மன்னன். குமாரசிங்கன் தலைமையிலான படையணியை செங்கடகலவில் பாதுகாப்புக்கு அனுப்பிவிட்டார். பக்கம் மாறிய சுதேசிய வீரர்களையும் கண்டிக்கு குமாரசிங்கனுடன் போகப் பணித்தார். மிகுதிப் படைகளுடன் தானும் இராசசிங்கன் தலைமையிலான படையினரும் பறங்கியரைத் தொடர்ந்து தாக்கி கொழும்பையும் கைப்பற்றுவது என்ற எண்ணத்துடன் கொழும்பு நோக்கி முன்னேறினார்.

கொழும்புக்கு படையெடுத்து வந்திருந்த கண்டிய வீரர்கள் ஏழு கோறளை, நான்கு கோறளை, காலி போன்ற இடங்களைக் கைப்பற்றி அங்கிருந்த போர்த்துக்கீசருடைய பாதுகாப்பு அரணங்களையும் கோட்டைகளையும் சேதப்படுத்தினர். மல்வானை, களுத்துறை கோட்டைகளையும் கைப்பற்றித் தரைமட்டமாக்கினர். பறங்கியரின் வழிபாட்டிடங்கள் பலவற்றை அடித்து நொறுக்கினர். பறங்கிப் படைகள் எல்லாம் கொழும்பக்குப் பின்வாங்கிச் சென்றனர்.

கொழும்பு நகரின் பிரதான வாயில் மூடப்பட்டு கண்டிய வீரர்கள் புகுந்து விடாதபடி பாதுகாக்கப்பட்டது. இவ்வாறு கண்டியப் படைகள் வீரத்துடன் முன்னேறி கொழும்பைத் தாக்கிக் கொண்டிருக்கும் போது இராசசிங்கன் சுகவீனம் அடைந்ததனால் அவனை உடனடியாக இளஞ்சிங்கனின் பாதுகாப்பில் நூறு வீரர்களுடன் கண்டிக்கு அனுப்பினார் செனரத் மன்னன்.

இவர்கள் கண்டி செல்லும் வழியில் மெனிக்கடவரவில் நோயுற்றிருந்த 70 போர்த்துக்கீச வீரர்களையும், கோட்டைக்காவலரையும் கைது செய்து கொண்டு கண்டிச் சிறையில் அடைத்தனர். செங்கடகலவில் இராசசிங்கனுக்கு வைத்தியம் செய்யப்பட்டது. அவன் தேறிவரும் வரை நண்பன் இளஞ்சிங்கன் அருகிலிருந்து தேவையானவற்றைக் கவனித்து வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌரத் மன்னனும் கொழும்பினுள் ஊடுருவுவதற்காக கடும் முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதும் அவை பலனளிக்காத நிலையில் கண்டி திரும்பியிருந்தான்.

இவ்வாறு நண்பனுக்கு குணமாகியதும் இளஞ்சிங்கன் ஒரு மாத காலத்துக்கு மேலாக தங்கியிருந்ததால் கொட்டியாபுரம் திரும்ப எண்ணங் கொண்டான். இராசசிங்கனும் நண்பனைப் பிரிய மனமில்லாமல் விடை கொடுத்தான். மன்னன் சௌரத் பல வகையான அன்பளிப்புப் பொருட்களுடன் அவற்றைக் கொண்டு சேர்க்க பத்து வீரர்களையும் குதிரையிலனுப்பி வைத்தான்.

இளஞ்சிங்கனும் பறங்கியர் பற்றிய பயமின்றி வழி நெடுகிலும் கண்டி மக்கள் தமது வாழ்த்துக்களைக் தெரிவிக்க அவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டு நண்பன் சத்யனுடன் கொட்டியாரபுரத்தை வந்தடைந்து வன்னியனாரைச் சந்தித்து நடந்த போர் விபரங்களையெல்லாம் கூறி சௌரத் மன்னன் கொடுத்தனுப்பிய அன்பளிப்புப் பொருட்களையும் கொடுத்தான். வன்னிமையும் தன் மருமகனை உச்சிமோந்து மனங்குளிர நீடுழி வாழ வாழ்த்தினார்.

கொட்டியாபுரத்து வீரத்தை உலகிற்குப் பறை சாற்றிய இளஞ்சிங்கனுக்கு அன்று வன்னியனார் அரண்மனையில் விருந்தும் பாராட்டு நிகழ்வும் தடபுடலாக நிகழ்ந்தேறியது. இளஞ்சிங்கன் வரலாற்றில் ஓர் நாயகனாக மிளிர்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமரபுந்துய்ய இளஞ்சிங்க வன்னிமை

கொட்டியாபுரத்து வன்னிமை முதமையடைந்ததன் காரணமாக இளஞ்சிங்கனை வன்னிமையாக்குவது என தீர்மானிக்கப்பட்டு வன்னிமையாக முடிசூடும் நிகழ்வு நடைபெறும் தேதி தண்டோரா போடப்பட்டது. கொட்டியாபுரப்பற்று எங்கும் வடக்கே சம்பூர் தொடங்கி தெற்கே வெருகலம்பதி வரையிலான மக்கள் இளஞ்சிங்கம் வன்னிமையாகும் நிகழ்வைக் காண்பதற்காக மாட்டு வண்டில்களிலும் கால்நடையாகவும் சாரை சாரையாக தலைநகர் மேன்காமத்தை நோக்கி அணிவகுத்தனர். கொட்டியாபுரப்பற்றின் தலைநகரான மேன்காமம் அன்று புதுப்பொலிவுடன் அலங்காரப்படுத்தப்பட்டது. மாவலியாள் மகிழ்தே சீதலமூட்டும் மேன்மை தங்கிய பதியாம் மேன்காமம் அன்று அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது

.

பறங்கியர் இந்நிகழ்வைக் கெடுத்து அசம்பாவிதம் விளைவிக்கலாம் என்று வன்னிமையின் ஒற்றர்கள் விழிமேல் எண்ணெய் விட்டு துலாவிக் கொண்டிருந்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"தென்கைலை ஈசன் தானுறைந்த – திருக்கரைசையம்பதி**
**ஆயகலை யறுபத்துநான்கையூட்டிய முத்தூர்அகத்தியர் பதி**
**மாவலித் தங்கையாள் தாலாட்டி சீராட்டி மகிழ்வுறும் பதி**
**மன்னன் இராவணன்,குளக்கோட்டன்,திருமங்கை பூஜித்த பதி"**

இவ்வாறான பல சிறப்புக்களைக் கொண்ட அகத்திய தாபன திருக்கரைசையம்பதியில் எழுந்தருளியிருக்கும் நந்தலிங்கேஸ்வரரை வணங்கிவிட்டு மேன்காமம் திரும்பிய இளஞ்சிங்கனுக்கு வழிநெடுகிலும் மலர்தூவி புகழ்பாடி வாழ்த்தொலி முழங்க, மேன்காமத்தில் வழக்கமான சம்பிரதாயங்களுடன் குளக்கோட்டு மன்னன் தோற்றுவித்த வன்னிமைப் பரம்பரையின் தொடர்ச்சியாக **'இருமரபுந்துய்ய இளஞ்சிங்க வன்னிமை'** என்னும் பட்டம் வழங்கி திருக்கோணேஸ்வரர் ஆணையின் மேல் செங்கோல் அளிக்கப்பட்டது. சிவசித்திரப்பெருமாள் வழிவந்த சம்பூர் புலவர் சாத்திரியார் இளஞ்சிங்க வன்னிமையை புகழ்ந்து பாட, மக்களின் வாழ்த்தொலி வானைப் பிளந்தது.

அன்றைய இரவு களைப்பு மேலீட்டினால் விரைவாக நித்திரைக்குச் சென்ற இளஞ்சிங்க வன்னிமையின் மனதில் மிகவும் சிக்கலானதொரு காலப்பகுதியில், தன்மீது பாரியதொரு பொறுப்பு சுமத்தப்படுவதாகத் தோன்றியது. அதை மேற்கொள்ளும் முறைகளை நினைத்து தனது காதல் மனைவி தாமரை மற்றும் அருமைப் புதல்வனை பார்த்தவாறு உறக்கம் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலைக் கோட்டையில் ஒல்லாந்தர்

கண்டி இராச்சியத்திலும் மாற்றம் ஏற்பட்டிருந்தது. அங்கு இராஜசிங்கன் மன்னனாக முடிசூடியிருந்தான். பறங்கியரின் ஈவிரக்கமற்ற செயல்களினால் இராசசிங்கன் பறங்கியரை இலங்கையிலிருந்து வெளியேற்றும் நோக்கோடு ஒல்லாந்து தேசத்தாருடன் நட்புக் கொள்ளத் தொடங்கினான்.

இதற்கு கொட்டியாரத்துறையூடான வழியும் வன்னிமையான இளஞ்சிங்கனின் முழுமையான ஒத்துழைப்பும் இருந்து கொண்டே வந்தது. மறுபுறமாக பறங்கியருக்கும் ஒல்லாந்து தேசத்தாருக்கும் கடலில் உறவுநிலை சீர்கெட்டுக் கொண்டே வந்தது. சில சமயங்களில் போர்களும் இடம்பெற்றன.

இவ்வாறிருக்கும் காலப்பகுதியில் ஒல்லாந்தர் திருகோணமலைக் கோட்டையைக் கைப்பற்றும் எண்ணம் கொண்டவராய் கண்டியரசனுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வெற்றியும் கண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனடிப்படையில் கண்டி இராசதானிக்குட்பட்ட கொட்டியாபுரம், மட்டக்களப்பு, சம்மாந்துறை ஆகிய வன்னிமைகளின் பேராதரவுடன் திருகோணமலைக் கோட்டையின் மீது போர் தொடுத்தனர். இப்போரின் மூலம் திருக்கோணேஸ்வரப் பெருமானின் கோவிலை இடித்தழித்த பறங்கியரின் மேல் வெறுப்புடனிருந்த கொட்டியாரப்பற்று வன்னிபமும் மக்களும் தங்களாலான உதவிகளை விருப்புடன் செய்யலாயினர். இளஞ்சிங்க வன்னிபம் தனது சார்பாக 500 போர் வீரர்களை தேவையான வேலையாட்களுடன் அனுப்பி வைத்தான்.

ஒல்லாந்து கட்டளைத்தளபதி அந்தோனியோ கேன் என்பவன் 12 கப்பல்களுடன் வந்து கோட்டை மீது போர் தொடுத்தான். துப்பாக்கிகளும், பீரங்கிச் சுடுகலன்களும் பிரதான பங்கு வகித்த இப்போரில் கோயில் மலையடி வளாகத்தில் தரையிறக்கத்தை வெற்றிகரமாக மேற்கொண்டனர்.[7] இதன் பெரும்பங்கு கோட்டையினுள் உட்புகுவதாகவே இருந்தது. இதற்கு இளஞ்சிங்கன் வழங்கிய திட்டமே பெரிதும் உதவியதால் அவர்கள் இளஞ்சிங்கன் வன்னிமைக்கு தமது நன்றியை தெரிவித்ததோடு அவருடைய ஆட்சிக்கு உறுதுணை புரிவதாகவும் கூறினர்.

இப்போர் பற்றிய செய்தியினால் மக்கள் அங்குமிங்கும் ஆரவாரப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் இளஞ்சிங்கனும் சத்யனும் உரையாடலிலீடுபட்டுக் கொண்டிருந்தனர்.

7. கி.பி. 1639 இல் ஒல்லாந்தர் 12 கப்பல்களுடன் வந்து திருகோணமலைக் கோட்டையை கொட்டியாபுரப்பற்று வன்னியின் 500 போர் வீரர்களின் உதவி கொண்டு போர்த்துக்கேயருக்கும் தெரியாத கோட்டைக்குப் போகும் இரகசியப் பாதையையும் வன்னிபம் மூலம் அறிந்து கொண்டு அதனூடாகச் சென்று போர்த்துக்கேயரைச் சிறைப்பிடித்தனர்.

(இலங்கைத்தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும் - பேராசிரியர் சி. பத்மநாதன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பா ஒல்லாந்தரின் இவ்வெற்றியின் மூலம் நாம் இன்னுமொரு அந்நியவர்களின் கைகளுக்குள் அகப்படுகின்றோமோ என்று எண்ணத் தோன்றுகின்றது என்றார் இளஞ்சிங்கன்.

அதை ஆமோதித்ததுடன் கடற்கரையோரப் பகுதியெங்கும் ஒல்லாந்தர் கோட்டை கட்டும் செய்தியும் வந்து கொண்டிருப்பதாகவும் கூறினான் நண்பன் சத்யன்.

அவ்வேளையில் கண்டியரசன் இராசசிங்கனிடமிருந்து வந்து நின்ற குதிரை வீரன் கொண்டு வந்த தகவலைப் படித்தான் இளஞ்சிங்கன்.

" கொட்டியாரபுரப்பற்று வன்னிமை இளஞ்சிங்கனுக்கு!
நம் நாட்டுக்கு பெரும் அழிவை ஏற்படுத்திய பறங்கியரிடமிருந்து நாம் விடுதலை பெறுகின்றோம். ஆனால் மீண்டுமோர் அந்நிய தேசத்தவரிடம் அடிமையாகப் போகின்றோமோ என்னும் நினைப்பு கவலையளிப்பதாயுள்ளது. ஒல்லாந்து தேசத்தாரின் நடவடிக்கைகளை மிக உன்னிப்பாக அவதானிக்கவும் அவர்கள் ஒப்பந்தத்தை கடைப்பிடிக்கின்றார்களா என அவதானிக்கவும். தேவையேற்படின் தகவல் அனுப்பவும்.

- கண்டி அரசன் இராசசிங்கன்- "

வாசித்த பின் குதிரை வீரனை அனுப்பிய இளஞ்சிங்கன் தீவிர சிந்தனையிலீடுபடலானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளஞ்சிங்கன் வெற்றி

இவ்வாறு கண்டியரசனுடனான ஒப்பந்தப்படி ஒல்லாந்தர் வணிக நடவடிக்கைகளிலீடுபட்டுக் கொண்டிருக்கின்ற காலங்களில் இடையிடையே ஏற்படுகின்ற சம்பவங்களினால் இரு தரப்பினரும் போர் புரிவதும் பின் சமாதானமாகப் போவதுமாக இருந்தனர். இதனொரு அம்சமாக கண்டிரசன் பிரான்சியருக்கு கொட்டியாரத்துறையில் கோட்டை கட்ட அனுமதியளித்ததும் அதன் பின் போர் ஒன்றின் மூலம் பிரான்சியரை ஒல்லாந்தர் அங்கிருந்து வெளியேற்றியதும், ஆங்கிலேயருக்கு வியாபார அனுமதியளித்து அவர்களுடன் வர்த்தக உறவுகளை மேற்கொண்டதுமான காரணங்களால் ஒல்லாந்தர் கண்டியரசன் மேல் கோபங்கொண்டிருந்தனர்.

இவற்றுடன் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனி கொட்டியாரத்தின் நிலங்களைக் கைப்பற்றுவதன் மூலம் அதிக வரிகள், வருமானங்களைப் பெறலாம் என்னும் நோக்கத்திற்காக கண்டியரசின் முக்கிய ஆதிக்கப் பகுதியான கொட்டியாரத்தின் மீது போர் தொடுக்கத் தயாராகினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை ஒற்றர்கள் மூலம் முன்னரே தெரிந்து கொண்ட இளஞ்சிங்க வன்னிமை தெரிந்தெடுக்கப்பட்ட சிறந்த வீரர்களைக் கொண்ட படையொன்றை தயார்படுத்தினார். தனது நண்பனும் தளபதியுமான சத்யனின் தலைமையில் வாட்படை, புரவிப்படை, துப்பாக்கிப்படை, விற் படை என்பன ஒழுங்கமைக்கப்பட்டது.

கொட்டியாபுர கோட்டையிலிருந்து புறப்படும் படை கிழக்குப் பக்கமாகவே நகரப் போகின்றது என்பதை ஏற்கனவே ஒற்றர்கள் மூலம் அறிந்திருந்த இளஞ்சிங்கன் தனது படைகளை அங்கு நகர்த்தினான். ஒல்லாந்துப் படைகள் இடிமண் துறை ஆற்றைத் தாண்டும் போது அவர்கள் மேல் போர் தொடுப்பது என திட்டமும் தயார் செய்யப்பட்டது. இங்கு ஆரம்பத்தில் போருக்கு இளஞ்சிங்க வன்னிமையே முதலில் செல்வதாக இருந்தது. ஆனால் வன்னிமையிடம் கடும் வார்த்தைப் போராட்டத்தின் பின் அன்றைய போரின் தலைமையைப் பெற்றுக்கொண்ட தளபதி சத்யன் போருக்கான தயார்ப்படுத்தலை மிக நேர்த்தியாகச் செய்து முடித்திருந்தான்.

அவ்வாறே ஒல்லாந்துப் படைகள் இடிமண்துறையைத் தாண்டுவதற்காக அருகில் இருந்த மூங்கில் மரங்களைப் பயன்படுத்தி கட்டுமரங்கள் தயாரித்துக்கொண்டிருந்த போது போர் ஆரம்பமாகியது. கடும் மூர்க்கத்தனமாக இடம்பெற்ற இப்போரில் தளபதி சத்யன் தலைமையிலான படை வெற்றி பெற்றது.

எதிரிப்படைகளை குறைவாக மதிப்பிட்டதன் காரணமாக 46 பேர் கொண்ட சிறிய படையொன்றையே ஒல்லாந்தர் பயன்படுத்தினர். பெரும் போர் ஒன்றை எதிர்பார்க்காத ஒல்லாந்தர் இப்படை நடவடிக்கை மூலம் கொட்டியாபுரப்பற்று வன்னிமையை ஒப்பந்தம் மூலம் பணிய வைக்கலாம் என்றும் கண்டியரசனுடனான தொடர்பை துண்டிக்க வைக்கலாம் என்றுமே எதிர்பார்த்தனர். ஆனால் எதுவுமே நடைபெறாமல் ஒல்லாந்தரின் திட்டங்கள் எல்லாம் வீணாகின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் போர் செய்த இளஞ்சிங்கனின் படையினால் ஒல்லாந்து தரப்பில் ஒருவரை மாத்திரம் மீதம் விட்டு மற்றைய அனைவரும் உயிரிழக்க வேண்டியேற்பட்டது. [8] அத்தோடு நில்லாது கொட்டியாரத்துறை மற்றும் கொட்டியாரக் கோட்டையை நோக்கியவாறு இளஞ்சிங்கனின் படை வீரர்கள் முன்னேறிப் போர் புரிந்தனர். இதனால் அங்கிருந்த ஒல்லாந்துப்படை சிறு படகுகளின் உதவியுடன் திருகோணமலைக் கோட்டைக்குப் பின் வாங்கினர். கொட்டியாரக் கோட்டை தீயிட்டுக் கொழுத்தப்பட்டது.

வெற்றிபெற்றுத் திரும்பிய படைவீரர்களை வரவேற்கும் முகமாக கொட்டியாரபுர வன்னிமையின் தலைநகரான மேன்காமம் அலங்கரிக்கப்பட்டது. மக்களனைவரும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் காணப்பட்டனர். முத்தூரிலிருந்த படைகளுக்கு அங்கிருந்து நேரே மேன்காமம் திரும்புமாறு இளஞ்சிங்கன் கட்டளை இட்டிருந்தான். அதன்படி திரும்பிக் கொண்டிருந்த படை வீரர்கள் கோயில் மலையடியில் இருந்து மேளதாளங்களுடன் பெரியவெளி, முள்ளித்தீவு, பள்ளவெளி, நீலாப்பளை, கங்கைவேலி முதலான கிராமங்களுக்கூடாக மேன்காமம் வரை சிறந்த வரவேற்பொன்றை வன்னிமை இளஞ்சிங்கன் கொடுத்து பெருமைப்படுத்தியிருந்தான்.

தனது நண்பன் சத்யனை ஆரத் தழுவிய இளஞ்சிங்கன் ஆனந்தக் கண்ணீர் சிந்தினான்.
"நண்பா வரலாற்றில் எனக்கு ஓர் மகத்தான இடத்தைத் தந்து என்னை பெருமைப்படுத்தியிருக்கின்றாய்" என்று கூறினான்.

8. இளஞ்சிங்க வன்னிமையுடனான போரில் 22 ஒல்லாந்துப் படையினர் 24 லஸ்கரின்ஸ்களுடன் ஈடுபட்டனர். இப்போரில் 45 பேர் ஒல்லாந்து தரப்பில் பலி. ஒரு படைவீரர் உயிருடன் தப்பியோட்டம். இதனால் ஒல்லாந்துப் படை திருகோணமலைக் கோட்டைக்குள் முடங்கியது. (காலனித்துவத் திருகோணமலை - கனகசபாபதி சரவணபவன். பக். 64)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்யனும் பதிலுக்கு
“நண்பா! இந்தப் போர் புரியும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்த பாக்கியம். நான் எனது கடமையைத் தான் செய்தேன்” என்றான் பணிவாக.

நண்பனை மெச்சிய இளஞ்சிங்கன்
“நாளைய வரலாறு அந்நிய தேசத்தவரை இச்சிறிய தமிழ்த்தேசமான கொட்டியாரபுரப்பற்றும் எதிர்த்து நின்ற வீரத்தை பெருமையுடன் பறைசாற்றும்”

என்று புகழ்ந்துரைத்தவாறு படைவீரர்கள் அனைவருக்கும் தகுந்த சன்மானங்கள் வழங்கி வாழ்த்திய இளஞ்சிங்கன், நண்பனை அழைத்துக் கொண்டு அரண்மனைக்குள் புகுந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருமரபுந்துய்ய இளஞ்சிங்க வன்னிமையின் முன்னிலையில் கண்டியரசன் இராசசிங்கன் காலத்தில் தம்பலகாமத்து வீரக்கோன் முதலி வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல் என்னும் நூலை அரங்கேற்றம் செய்தார்"

— வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல்

# நூல் அரங்கேற்றம்

இவ்வாறு நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கும் பொழுது இளஞ்சிங்க வன்னிபத்தின் நல்லாட்சியின் காரணமாக கொட்டியாபுரப்பற்று மக்கள் சீரும் சிறப்புமாக செல்வச் செழிப்புடன் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

இத்தேசம் உற்பத்தியில் தன்னிறைவு கண்டிருந்தது. கோயில் திருவிழாக்களும், கலைஇலக்கிய விழாக்களும் குறைவில்லாதவாறு சிறப்புடன் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பல புலவர்கள் தமது பாடல்களை இளஞ்சிங்க வன்னிமை முன் பாடி தமிழை வளர்த்த வண்ணமாக இருந்தனர். நாட்கள் பல கடந்தும் நரை தோன்றியும் அஞ்சா நெஞ்சன் இளஞ்சிங்கத்தின் நல்லாட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஒரு நாள் அரசவையில் தம்பலகாமத்துப் புலவர் என்று தம்மை அறிமுகப்படுத்திய நபரொருவர் வன்னியனார் இளஞ்சிங்கன் முன் வந்து வன்னிபத்தையும், கொட்டியாபுரப் பற்றையும் புகழ்ந்து பாடி அரசரைக் கவர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமகிழ்ந்த இளஞ்சிங்கனும் புலவரை வணங்கி

"புலவர் பெருமானே தாங்கள் யார்? தங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்"


என்று வேண்டினான்.

அவர் தன்னை வீரக்கோன் முதலியார் என்றும் தான் தம்பலகாமப்பற்றை சேர்ந்தவர் என்றும் அறிமுகப்படுத்தி, தான் வந்த விபரத்தைக் கூறலானார்.

"இருமரபுந்துய்ய இளஞ்சிங்க வன்னிமையே! உமது பாதங்களுக்கு வணக்கம். நான் சீர்பூத்த வெருகலம்பதி சித்திரவேலாயுதர் சுவாமியின் மீது பாடல் ஒன்று இயற்றியுள்ளேன். அதை உமது காலத்திலேயே, உம்முடையே தலைமையிலேயே அரங்கேற்றும் எண்ணம் கொண்டேன். ஏனெனில் அழிக்கப்பட்டு வரும் இந்து மதத்தையும், தமிழ் மொழியையும் காத்து வருகின்ற பெரும் பொறுப்பை நீர் செய்து வருவது தமிழர் தேசங்கள் முழுவதும் பெருமையாகப் பேசப்படுகின்றது. அதே போல உமது நண்பரும் கண்டியரசருமாகிய இராசசிங்கன் மகாராசாவும் இந்து மதத்தை ஆதரித்ததோடு நில்லாது, வெருகலில் கோவில் கொண்டுள்ள முருகப் பெருமானுக்கு மானியங்களும், தங்கப் பதக்கங்களும் வழங்கி இறை பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். எனவே இச்சந்தர்ப்பமே இந்நூலை அரங்கேற்றப் பொருத்தமானது என நினைத்து உமது ஆதரவை வேண்டி வந்துள்ளேன்" என்றார்.

வன்னிமையும் உணர்ச்சிவசப்பட்டு தனது இருக்கை விட்டெழுந்து "புலவரே!. இது என் வாழ்நாளில் கிடைத்த அரும்பெரும் பாக்கியம். உமது எண்ணம் போல் நூல்அரங்கேற்றம் வெருகல் சித்திரவேலாயதர் சுவாமி கோயில் மகாமண்டபத்தில் எம் தேசத்து மக்கள் முன்னிலையில் பிரமாண்டமான முறையில் நடைபெறும். யாதொரு குறையுமின்றி உமது எண்ணம் போல் நிகழும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறி புலவரை வழியனுப்பி வைத்தான்.

உடனேயே தளபதியை அழைத்து நூல்அரங்கேற்றம் சிறப்புற நிகழ்வதற்கான ஏற்பாடுகளை புலவருடன் இணைந்து மேற்கொள்ளும்படி ஆலோசனை வழங்கினான். அரங்கேற்றத்திற்கு குறிக்கப்பட்ட நாளும் வந்தது.

வெருகல்பதியானது சிறப்புற அலங்கரிக்கப்பட்டது. கங்கையாற்றுக்கு அப்பால் கதிரவெளி நகர் வரையும் வீதிகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கண்டியரசன் இராசசிங்கனுக்கும், கண்டி இராச்சியத்திற்குட்பட்ட பல வன்னிச் சிற்றரசுகளுக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருந்தது. பல வன்னி நாட்டு தமிழ்ப் புலவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

புலவர் வீரக்கோன் முதலியாரும் அவர் இயற்றிய பாடல் சுவடிகளும் அலங்கரிக்கப்பட்ட யானை மீதேற்றி இளஞ்சிங்க வன்னிபத்தால் வெருகலம்பதியை நோக்கி அழைத்து வரப்பட்டனர். முன்னே மேளதாளங்களுடன் மங்கல வாத்தியங்கள் முழங்க இருமருங்கிலும் மக்கள் மலர்களைத் தூவி வரவேற்றனர். ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி கோயில் மகாமண்டபம் மலர்களால் சோடனை செய்யப்பட்டு ஒரு தேவலோக சபை போன்ற தோற்றப் பொலிவுடன் காணப்பட்டது. இவைகளைக் கண்ணுற்ற வீரக்கோன் முதலியார் நன்றிப் பெருக்குடன் இளஞ்சிங்க மன்னனை நோக்கினார். இவ்வளவு மிகப் பிரமாண்டமான அரங்கேற்றத்துக்கு ஏற்பாடு செய்த மன்னனுக்கு தனது கண்களால் நன்றி தெரிவித்தார்.

அவை முதல்வராக வீற்றிருந்த புலவர் தானியற்றிய வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல் என்னும் நூலை அரங்கேற்றம் செய்தார். அக்கூட்டத்திலே இராசசிங்கனுடன் பல வன்னிச் சிற்றரசர்களும், திருகோணமலை தேசத்து மக்களும், மட்டக்களப்பு தேசத்து மக்களும், கண்டியரசன் பிரதிநிதிகளும் பங்கு கொண்டிருந்தனர். கொட்டியாபுர தேசத்து வன்னிமை இளஞ்சிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கேற்ற முடிவில் இங்கு வருகை தந்திருந்த புலவர்களும் சிற்றரசர்களும், அரச பிரதிநிதிகளும் நினைவுப்பரிசில்களுடன் கௌரவமாக இளஞ்சிங்க வன்னிபத்தால் வழியனுப்பி வைக்கப்பட்டனர்.

வீரக்கோன் முதலியாரும் மன்னனுக்குத் தன் நன்றியைத் தெரிவித்ததோடு
"இருமரபுந்துய்ய இளஞ்சிங்க வன்னிமையே உன் புகழ் இப்புவியுள்ள வரை பரவியிருக்கும்" என்று கூறி வாழ்த்தினார். இளஞ்சிங்க வன்னியனாரும் புலவரை வெகுமதிகள் பலவற்றுடன் வழியனுப்பி வைத்தார்.

தொங்கும் தசை கொண்ட கன்னங்கள், பழுத்த நரை கொண்ட கேசங்கள் இருந்த போதும், தளராத மிடுக்கான நடை கொண்ட இளஞ்சிங்க வன்னிபம் இளம்பராயத்திலிருந்த தனது மருமகருக்கு வன்னிமைப் பட்டங்கட்ட தயாராகுமாறு மந்திரிக்கு ஆணையிட்டு வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் முன்னிலையில் தியானத்திலீடுபட்டார்.

முற்றும்.

**தேசிய வீரன் இளஞ்சிங்க வன்னியன் புகழ் வாழ்க!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்


01. முதலியார்.செ.இராசநாயகம் - யாழ்ப்பாண சரித்திரம்

02. பேராசிரியர்.சி. பத்மநாதன் - ஈழத்து இலக்கியமும் வரலாறும்

03. நா.நவநாயகமூர்த்தி - ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள்

04. பேராசிரியர்.செ.கிருஷ்ணராசா - இலங்கை வரலாறு (பாகம் 11)

05. பேராசிரியர்.சி. பத்மநாதன் - இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும்

06. கலாநிதி.கனகசபாபதி சரவணபவன் - காலனித்துவத் திருகோணமலை

07. வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல் (வீரக்கோன் முதலியார் இயற்றியது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dr.ஸதீஸ்குமார் திருகோணமலை, சம்பூர் மண்ணின் புதல்வர். தளராத வரலாற்றுத்தேடலோடு, அயராது அவற்றை ஆவணப்படுத்தும் ஆவலும் கொண்ட துடிப்பான இளைஞர். அவரது இடையறாத முயற்சியின் வெளிப்பாடு தான் இக் "கொட்டியாபுரத்து சிங்கம்" என்னும் குறுநாவல்.

கதையின் நாயகனான கொட்டியாரப்பற்று இருமரபுந்துய்ய இளஞ்சிங்க வன்னியனார் வீரமும், தமிழ்ப்பற்றும் ஒருங்கே கைவரப்பெற்றவர்.

அவரது காலத்தில் கொட்டியாரப்பற்று நிர்வாகத்தின் கீழ் இருந்த நிலங்களைக் கைப்பற்ற ஒல்லாந்தரால் மேற்கொள்ளப்பட்ட படைநடவடிக்கையை வீரத்துடன் எதிர்கொண்டவர். இந்நிகழ்வினை அடுத்து ஒல்லாந்துப்படை திருகோணமலைக் கோட்டைக்குள் முடங்கியதும் அவரது வீரத்தின் ஒரு அடையாளம்.

"துன்னுமிரு மரபுந் துய்யவிளஞ் சிங்கமெனும்
வன்னிமை பொற்பாதம் வணங்கையினி சொல்லாதை..."

என்று "வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல்" தந்த தம்பலகாமத்தின் முதுபெரும் கவிஞன் வீரக்கோன் முதலியார் வெருகல் ஆலய மண்டபத்தில் தேச மக்கள் கூடியிருந்த மகாநாட்டில் இருமரபுத்துய்ய இளஞ்சிங்க வன்னியனார் முன்னிலையில் அதனை அரங்கேற்றியது அவரது மொழியார்வத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு.

இன்னும் வெளிப்படுத்தப்படாத பல வரலாற்றுப் பொக்கிசங்களால் நிறைந்த பூமி திருகோணமலை. அதில் வாழ்ந்த சரித்திர நாயகன் கொட்டியாரப்பற்று இருமரபுந்துய்ய இளஞ்சிங்க வன்னியனாரை நம்மனக்கண் முன் கொண்டுவரும் இந்தப் படைப்பு மிகச்சிறந்த ஆவணப்படுத்தல் என்பதில் ஐயமில்லை.

கலாபூசணம் வே.தங்கராசா
தம்பலகாமம் - திருகோணமலை



Shriram Printers, Trincomalee.
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Photo- Bavan